பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 27 வியாழக்கிழமை 10.05.2018 கதிர் 185

## நன்னீர் மீனவர் சங்கங்களுக்கு நேற்று உதவி

வடக்கு மாகாணக் குறித்தொதுக் கப்பட்ட ஒரு கோடி 30 லட்சம் ரூபா நிதியில் வடமாகாண நன்னீர் மீன வர் சங்கங்களுக்கு நன்னீர் மீன்பிடி உபகரணங்கள் நேற்றுக் கிளிநொச் சியில் வைத்து வழங்கப்பட்டன.

பக்கம் 03

# நீதித்துறைத் தாமதங்களால் குற்றவாளிகள் தப்ப வாய்ப்பு

## நாடாளுமன்றில் சுமந்திரன் குற்றச்சாட்டு



கொழும்பு, மே 10

குற்றவியல் வழக்குகளில் தாமதம் என்பதே பெரும் பிரச்சி னையாக உள்ளதாகத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன், நீதித்துறையில் ஏற்படும் தாமதங்களைப் பயன்படுத்திப் பாரிய குற் றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் தப்பித்துக் கொள்கின்ற னர் எனவும் குற்றஞ்சாட்டினார்.

பக்கம் 14

## மைத்திரியிடம் மன்னிப்பு கோரினாராம் பொன்சேகா

கொழும்பு, மே 10 அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று மதியம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வைச் சந்தித்து மன்னிப் புக் கோரினார் எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதி மைத்தி ரிபாலசிறிசேனதலைமை யில் நேற்று நடைபெற்ற

பக்கம் 14

## ஐ.தே.கவை வீழ்த்துவதே எமது ஒரே இலக்காகும்

### சபையில் எஸ்.பி. அறிவிப்பு

கொழும்பு, மே 10 அரசின் கொள்கை மீதான அதிருப்தியின் காரணமாகவே நாம் எதிர ணியின் ஆசனத்தில் அமர்ந்தோமே தவிர ஐக் கிய தேசியக் கட்சியின் மீதோ அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

பக்கம் 14

## நிரந்த தீர்ப்பாயம் அமைக்கும் சட்டவரைவு நிறைவேறியது

கொழும்பு, மே 10 நிரந்தர நீதாய மேல் நீதிமன்றை (ட்ரயல் அட் பார்) அமைப்பதற்கான சட்டவரைவு 119 வாக்குக ளால் நாடாளுமன்றில் நேற்று நிறைவேறியது.

சட்டவரைவுக்கு எதி ராக 52 வாக்குகள் அளிக்கப்பட்டன.


நிதி மோசடிகள் மற் றும் இலஞ்ச ஊழல்கள் பற்றி விசாரணை நடத்து வதற்காக நிரந்தர நீதாய மேல் நீதிமன்றங்களை (ட்ரயல் அட் பார்) அமைப் பதற்காகச் சட்டவரைவு

பக்கம் 03

## பல்கலை மாணவர்களின் செயற்பாட்டால் வருத்தம்

### முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)



முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் விவகாரத்தில் யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் செயற்பாடு மன வருத்தத்தைத் தருகின்றது என்று வடக்கு மாகாண முதலமைச் சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பக்கம் 03

## கூட்டு எதிரணியில் இருந்தே வருவார் அடுத்த ஜனாதிபதி

### கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, மே 10 யார் என்ன கூறினா லும் கூட்டு எதிரணி தலை மையிலான கட்சிகள் நிறுத்தும் வேட்பாளர் நாட் டின் அடுத்த ஜனாதிபதி யாகத் தெரிவு செய்யப்ப டுவார் எனக் கூட்டு எதிரணி ஒருங்கிணைப்பாளரான

பக்கம் 14

## ரயில் சண்டியர் நேற்று பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 10 கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலில் குடும்பப் பெண் ஒருவரு டன் தகாத முறையில் நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ரயில்வே உத்தியோகத்தரைப் பிணையில் விடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்உத்தரவிட்டது.

பக்கம் 14

## டக்ளஸ் எம்.பிக்கு எதிரான ஸ்ரீதர் தியேட்டர் வழக்கு ஜூன் 6 இல் விசாரணை

யாழ்ப்பாணம், மே 10 யாழ்ப்பாண நகரின் மத்தியில் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் தலைமை அலுவலகம் இயங்கும்ஸ்ரீதர்தியேட்டர் கட்டடத்தின் உரித்தை

பக்கம் 03

## நாடாளுமன்றத்தில் தீ விபத்தால் பதற்றம்

கொழும்பு, மே 10 நாடாளுமன்றத்தில் நேற்றுத்திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாகப் பதற்ற நிலை ஏற்பட்டது.

அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட விசேட அறையில் இந்த அனர்த் தம் ஏற்பட்டது.

புத்த சாசன அமைச் சர் காமினி ஜயவிக்ரம பெரேராவின் அலுவலக அறையிலேயேதீவிபத்து இடம்பெற்றது.

தீயணைப்பு ஊழியர்

பக்கம் 14

## துன்னாலை கிழக்கில் குண்டு மீட்பு



துன்னாலை கிழக்குப் பகுதியில் பாழடைந்த வீடொன்றின் வெற்றுக் காணியில் இருந்து

பக்கம் 14

## 20ஆவது திருத்தச் சட்டம் உள்நோக்கம் கொண்டது

### குற்றம் சாட்டுகிறார் கம்மன்பில



கொழும்பு, மே 10 மக்கள் விடுதலை முன் னணி கொண்டு வரும் 20 ஆவது திருத்தச் சட்டம் உள் நோக்கம் கொண்டது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான நாடா ளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்று

பக்கம் 03

## இரணைதீவில் மக்களை சந்தித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



யாழ்ப்பாணம், மே 10

இரணைதீவில் தம்மை மீளக்குடியமர்த்துமாறு கோரி அங்கு சென்று தங்கியுள்ள மக்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றுக் காலை சந் தித்தனர்.

பக்கம் 14

## மாகாண எல்லை நிர்ணய அறிக்கை எங்கே போனது?

### கேள்வி எழுப்புகிறது கபே

கொழும்பு, மே 10 மாகாண சபைகளுக் கான எல்லை நிர்ணய அறிக்கை கையளிக்கப் பட்டு நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் நாடா ளுமன்றத்தில் அது சமர்ப் பிக்கப்படவில்லை என்று கபே அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக கபே அமைப்பின் நிறைவேற் றுப் பணிப்பாளர் ரஜித்

பக்கம் 14

### இது ரகசியம் அல்ல!

தென்னிலங்கையில் அரசியல் தலைவர்கள் மே தினத்தை ஒட்டி நிகழ்த்திய உரைகள் சுவாரஸியமான - ஏட்டிக் குப்போட்டியான - கருத்துக் களைத்தந்து நிற்கின்றன.

மட்டக்களப்பில் நடந்த ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் மே தினத் தில் உரையாற்றிய ஜனா திபதி மைத்திரிபால சிறி சேன, 2020 இற்குப் பிற கும் அரசியலில் தொடர் வேன், இப்போதைக்கு ஓய்வு பெறமாட்டேன் என்று அறிவித்தார்.

பக்கம் 03

# இரணைதீவு மக்களை மீளக்குடியேற்றுவதற்கு சட்ட ரீதியிலான அனுமதி எப்போது வழங்கப்படும்?




கொழும்பு, மே 10

இரணைதீவிலிருந்து இடம் பெயர்ந்துள்ள 435 குடும்பங்களையும் அந்தப் பகுதியில் மீளக்குடியேற்றுவதற்கு சட்ட ரீதியிலான அனுமதி எப்போது வழங்கப்படும்? என்பதுடன் இந்தப் பகுதியில் தற்போது தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மருத்துவ மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா எனப் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற 23/2 நியதிக் கேள்வி நேரத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூன்று தலைமுறைகளுக்கும் மேலாக பூர்வீகமாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் அமைந்துள்ள இரணைதீவில் வாழ்ந்திருந்த மக்கள் யுத்தம் காரணமாகக் கடந்த 1992 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த போது சுமார் 230 குடும்பங்களைக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்திருந்த இந்த மக்கள், முள்ளிவாய்க்கால் வரை சென்று, பின்னர் வவுனியா செட்டிக்குளம் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டு, தங்களது சொந்த நிலத்தில் மீள்குடியேற்றப்படுவதற்குப் பதிலாக இரணைமாதா நகர், மன்னார் ஓடத்தொடுவாய், நாச்சிக்குடா ஆகிய பகுதிகளில் குடியேற்றப்பட்டிருந்த நிலையில், இந்த மக்களது வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழில் முயற்சிகளில் சுதந்திரமாக ஈடுபட இயலாத நிலையில், பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வந்திருந்தனர்.

இதன் பின்னர், இம் மக்கள் இரணைதீவுக்குச் சென்று கடற்றொழிலில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் அங்கு மீளக் குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், தங்களது தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கும், தங்களது கால்நடைகளை வளர்ப்பதற்கும் தாங்கள் தங்கியிருந்து செயற்படுவதற்கு தங்களை இரணைதீவில் மீள்குடியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்

தற்போது சுமார் 435 குடும்பங்களைக் கொண்டிருக்கின்ற இந்த மக்கள், தமிழ் அரசியல்வாதிகள்மீது நம்பிக்கை இழந்துள்ள நிலையில், தாமாக முன்வந்து மேற்படி தீவில் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட சுமார் 400 பேர் வரை தங்கியிருந்து வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் நெடுந்தீவு உட்பட அனைத்து தீவுப் பகுதிகளிலும் பாதுகாப்பு கடமைகளில் கடற்படையினர் நிலை கொண்டுள்ள நிலையிலும் மக்கள் அங்கு மீளக்குடியமர்த்தப்பட்டு, தங்களது தொழிற்துறைகளை மேற்கொண்டு, பொது வாழ்க்கையில் நீண்ட காலமாக ஈடுபட்டு வருகின்ற நிலையில் மனிதாபிமான ரீதியிலும், இந்த மக்களது அடிப்படை உரிமைகள் ரீதியிலும் சிந்தித்து அதற்கான தீர்வு வழங்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

(க)

## ரூ.50 இலட்சம் பெறுமதியான நகைகளுடன் பெண் கைது!

கொழும்பு, மே 10

50 லட்சம் பெறுமதியான தங்க ஆபரணங்களைச் சட்ட விரோதமாக டுபாய் நாட்டிலிருந்து எடுத்து வந்த பெண் ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.



நீர்கொழும்பு, கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 12.15 மணியளவில் டுபாயில் இருந்து ஶ்ரீலங்கன் விமானசேவையின் யூ.எல் 222 என்ற விமானத்தில் வருகை தந்த பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்த பயணப் பையில் இருந்து 432 கிராமுடைய மாலை, வளையல், மோதிரம் மற்றும் இன்னும் பல தங்க ஆபரணங்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் அந்தப் பெண்ணையும் அவரிடமிருந்து மீட்கப்பட்ட தங்க ஆபரணங்களையும் விமான நிலையச் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

## அமெ. இன்டல் நிறுவனத்தின் கண்காட்சியில் இலங்கையை சேர்ந்த இளம் விஞ்ஞானிகள்!

கொழும்பு, மே 10

அமெரிக்காவின் இன்டல் நிறுவனத்தின் விஞ்ஞான மற்றும் பொறியியல் கண்காட்சிக்கு இலங்கைப் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இளம் விஞ்ஞானிகள் 4 பேர் அமெரிக்கா பயணமாகவுள்ளனர்.



கல்வி அமைச்சின் மூலமாக இவர்களுக்கான பயணச் சீட்டுக்களைக் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் வழங்கினார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இவர்கள் எதிர் வரும் 13ஆம் திகதி முதல் 18 வரை நடைபெறவுள்ள அமெரிக்கா இன்டல் நிறுவனத்தின் கண்காட்சியில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் தீ; ஒரு கோடி ரூபாவுக்கு மேல் நட்டம்!

கொழும்பு, மே 10

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று அதிகாலையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பொருள்கள் எரிந்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.



விமான நிலையத்திலுள்ள தீர்வையற்ற வர்த்தக நிலையத்தின் களஞ்சிய அறையில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான உபகரணங்கள் தீயில் கருகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக, அந்தப்பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்துள்ளது.

விமான நிலைய மற்றும் விமானப்படையினர் தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக விமான நிலையப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்திற்குச் சொந்தமான களஞ்சிய அறையிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது பெக்கோ இயந்திரம் ஒன்று பயன்படுத்தப்பட்டு களஞ்சிய அறையின் சுவரை உடைத்து உள்ளே செல்வதற்கு விமான நிலைய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் வெளியாகாத நிலையில் கட்டுநாயக்க பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சிகரெட் உற்பத்தி வீழ்ச்சி!

நாட்டில் சிகரெட் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு சிகரெட் உற்பத்தியில் 600 மில்லியன் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் பாலித அபேகோன் தெரிவித்துள்ளார். 2016 ஆம் ஆண்டில் சிகரெட் உற்பத்தி 4300 மில்லியனாகக் காணப்பட்டது எனவும் 2017 ஆம் ஆண்டில் சிகரெட் உற்பத்தி 3700 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புகைப்பிடித்தலை குறைப்பதற்குக் கடந்த வருடங்களில் பல்வேறு நடவடிக்கைகயை முன்னெடுத்திருந்தமை இந்த வீழ்ச்சியில் தாக்கம் செலுத்துவதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார். இந்த வருடமும் புகையிலைப் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் பாலித அபேகோன் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச தானிய வகைகள் மாநாடு கொழும்பில்!



கொழும்பு, மே 10

2018 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய தானிய வகைகள் மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்றது.

தானியக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று நாள் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு ஷங்ரில்லா ஹோட்டலில் ஆரம்பமானது.

40 நாடுகளைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.பல்கலை மாணவரிடமே நினைவேந்தலை விட்டுவிடுங்கள்

## ரெலோ ஸ்ரீகாந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்தும் பொறுப்பை யாழ். பல்கலைக் கழக மாணவர்களிடமே விட்டு விடுங்கள் என்று கோருகின்றார் ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா.

இவ்விடயம் தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விடயத்தில் எமக்குள்ளே நாங்கள் கருத்து வேறுபாடுகளால் முட்டி மோதிக் கொண்டிருக்காமல் ஒற்றுமையோடு செயற்படுவது மிகவும் அவசியமானது.

இளைய தலைமுறையினரான யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து விட்டுக் கொடுப்புடன் செயற்படுவதற்குப் புதிய தலைமுறை யினர் பலரைக் கொண்ட வடமாகாண சபை முன் வரவேண்டும்.

இந்த விடயத்தில் அநாவசியமான சர்ச்சைகளுக்கு மேலும் இடமளிக்காமல் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து அறிவார்ந்த ரீதியில் செயற்பட வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உரியது. எனவே, நினைவேந்தல் ஏற்பாடுகளைத் திட்டமிட்டு நடத்தும் கடமையை யாழ்.பல்கலைக் கழக மாணவர் சமூகத்திடம் ஒப்படைத்து விட்டு, அவர் களுக்குப் பக்கத் துணையாகவும் பின்னணியிலும் நின்று வடமாகாண சபை செயற்படுவது உசிதமானது.

இந்த வேண்டுகோளை வடமாகாண சபை முதலமைச்சரும் ஏனைய எமது உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோருகின்றோம். - என்றார். (உ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிவிப்புக்குப் பதிலடி தந்திருக்கின்றார் கூட்டு எதிரணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவின் செயலாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

*"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஓய்வைத் தீர்மானிப்பவர்கள் மக்கள்தான். அவரல்லர். அதை அவர் புரிந்துகொள்ள வேண்டும்.*

*"நாட்டில் இதுவரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் ஆறு பேர் பதவிக்கு வந்துள்ளனர். ஆனால் ஆட்சிக்கு வந்து மிகக் குறுகிய காலத்தில் - மூன்று ஆண்டுகளுக்குள் -' மக்கள் செல்வாக்கைப் பெருமளவில் இழந்த ஜனாதிபதி இவர்தான். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அவரது கட்சிக்கு ஆக 14 வீத வாக்குகளே கிடைத்தன. அது இப்போது மேலும் தேய்ந்து வருகின்றது. அடுத்த ஆண்டு - அதாவது 2019 - இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் போது, அதில் மைத்திரிபால சிறிசேன போட்டியிடுவாராயின் அவருக்கு ஐந்து வீத வாக்குகள் கூடக் கிடைக்காது. அத்தோடு அவரை அரசியலிலிருந்து மக்கள் ஓய்வு பெற வைத்து விடுவர். "*- என்றும் பதிலடி தந்திருக்கின்றார் பேராசிரியர் பீரிஸ்.

கொழும்பு, சுகதாஸ உள்ளக அரங்கில் நடைபெற்ற ஐ.தே. கட்சியின் மேதினக் கூட்டத்தில் அதன் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேறு ஒரு முக்கிய விடயத்தைக் கூறினார்.

*"இன்று ஊடகங்கள் தினசரி என்னைத் தாறுமாறாக வசைபாடி விமர்சனம் செய்கின்றன. அதைப் பார்க்கும்போது சந்தோஷமாகவும் இருக்கின்றது. அதை சாதகமான சமிக்ஞையாகவே நான் பார்க்கிறேன். இப்படி என்னைத் தாராளமாக விமர்சிப்பவர்கள் அதன் மூலம், இந்த நாட்டில் வெள்ளைவான் கடத்தல் கலாசாரம் இல்லை என்பதையும், இப்படி விமர்சிப்பது சுடுகாடு வரை இட்டுச் செல்லாது என்பதையும், நாட்டில் ஜனநாயகமும், கருத்துச் சுதந்திரமும் மிதமாகவும் உறுதியாகவும் உள்ளன என்பதையும் ஏற்றுக் கொள்கின்றார்கள் என்றே அர்த்தம்.*

*"ராஜபக்ஷ காலத்தில் இப்படி விமர்சித்திருந்தால், அவர்களின் கதை சுடுகாட்டில்தான் முடிந்திருக்கும்."* - என்றார் பிரதமர் ரணில்.

மற்றொரு விடயத்தையும் மனதைத் தொடுமாறு அங்கு அவர் கூறினார்.

*"1994 இல் ஐ.தே.கட்சியின் உயர் தலைவர்கள் பலரையும் விடுதலைப் புலிகள் கூண்டோடு அழித்தபோது அத்துடன் ஐ.தே.கட்சியின் கதை முடிந்தது, அது புதைக்கப்பட்ட கட்சியாகி விடும் என்றே பலரும் கருதினர்.*

*"ஆனால், அந்தச் சமயம் நான் துணிச்சலுடன் கட்சிக்குத் தலைமையைக் கொடுத்தேன். அப்போது எனக்குத் துணையாக வரப் பலரும் தயங்கினர். இன்று கட்சியை நாம் தூக்கி நிறுத்தியிருக்கிறோம். அதை மறுசீரமைத்து புதிய தலைமுறைத் தலைமையுடன் அதை கட்டி எழுப்பியிருக்கிறோம். அந்தப் புதிய தலைமுறையின் கீழ் எமது கட்சி அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு நாட்டை அரசாளும். நான் இருக்கமாட்டேன். ஆனால் எமது கட்சி நாட்டின் தலைவிதியைத் தீர்மானித்து அதனை வழிநடத்தும்."*- என்றார் ரணில்.

அவரது அந்த உரை ஐ.தே. கவினர் பலரின் மனதைத் தொடுவதாக அமைந்தது என்கின்றனர் செய்தியாளர்கள்.

இதே மேதினத்தில்தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முந்திய ஐ.தே.க. தலைவரான ஜனாதிபதி பிரேமதாஸா தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பலியானார் என்பதும், அதற்கு சிலதினங்களுக்கு முன்னர் லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டார் என்பதும் தெரிந்தவையே. அடுத்த ஆண்டில் - 1994 ஜனாதிபதித் தேர்தல் சமயம் - மற்றொரு ஐ.தே.க. தலைவரான காமினி திஸநாயக்கா குண்டுவெடிப்பில் உயிரிழந்தார்.

அதைத் தொடர்ந்து கட்சியின் தலைமையை ஏற்ற ரணில் விக்கிரமசிங்க கடந்த 24 ஆண்டுகளாக அதை வழிநடத்துன்றார். 2019 இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும்போது கட்சியின் தலைவராக அவர் இருந்தால், அது கட்சித் தலைமையில் அவரது வெள்ளி விழா ஆண்டாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

- மின்னல் -

### நிரந்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது நாடாளுமன்றில் நேற்று விவாதம் இடம்பெற்றது.

பெரும் ஊழல் மோசடிகள் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்றங்களை (ட்ரயல் அட் பார்) அமைப்பதற்கு நீதித்துறை சிறப்பு ஏற்பாடுகள் திருத்தச் சட்ட வரைவு நீதியமைச்சர் தலதா அத்துக்கோரளவினால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சட்டவரைவுக்கு எதிராக மஹிந்த ஆதரவுக் கூட்டு எதிரணி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தது.

அதனை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும் அல்லது அரசமைப்புக்கு முரணான சரத்துக்களில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என வியாக்கியானம் வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ஸ்ரீதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீளப் பெற்றுத் தருமாறு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் ஜூன் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இராட்ணசபாபதி ஸ்ரீதர் உள்ளிட்ட 6 பேர் மனுதாரர்களாகவும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை எதிர்மனுதாரராகவும் குறிப்பிட்டுச் சட்டத்தரணி கேசவன் சயந்தன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

1996ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி அனுமதி எதுவுமின்றிச் சட்டவிரோதமாகக் குடியேறிய முதலாவது எதிர்மனுதாரர், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக வாடகை எதையுமே வழங்காமல் ஆதனத்தையும் கட்டடத்தையும் வைத்துள்ளார்.

இதன் காரணமாக உரிமையாளர்களாகிய எமக்கு மாதம் ஒன்றுக்கு 75 ஆயிரம் ரூபா வீதம் ஏற்பட்ட இழப்பும் அதன் வட்டியையும் இணைத்து இது வரை காலத்துக்குமான இழப்பீடாக 10கோடி ரூபாவையும் எதிர் மனுதாரர் வழங்க வேண்டும். தற்போது இடம்பெறும் வழக்குச் செலவுடன் கட்டடத்துடன் கூடிய ஆதனத்தின் உரித்தையும் பெற்றுத் தர வேண்டும் என்றும் மனுதாரர்கள் கேட்டுள்ளனர்.

இந்த மனுவை எதிர்வரும் ஜூன் 6ஆம் திகதி அழைக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி வி.இராமகமலன் அனுமதியளித்துள்ளார். (ஐ)

## சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 10

இருபது வயதுக்கு உட்பட்ட இளைஞர்களுக்கான தேசிய சதுரங்கப் போட்டியில் பங்குபற்றுவோரைத் தேர்வு செய்வதற்கான தெரிவுப் போட்டிகள் நாளை 11 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி அடுத்த நாள் சனிக்கிழமையும், அதற்கு அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமையும் தொடர்ந்து நடைபெறும் என இலங்கைச் சதுரங்க சம்மேளனத்தின் பிரதிநிதியான த.அருணகிரிநாதன் அறிவித்துள்ளார்.

இருபது வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் ஆகிய இரு பாலருக்கும் தனித் தனியாக இத்தெரிவுப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

பதிவுகள் நாளை வெள்ளிக் கிழமை மாலை 3 மணி முதல் 3.45 மணி வரை நடைபெறும். போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அனுமதிக் கட்டணத்துடன் நாளை மாலை 3 மணிக்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (உ)

### 20 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை ஒழித்து விட்டுத் தேர்தல் நடத்தப்படும் தேவையை இல்லாமல் செய்து, இலங்கையில் தேர்தல் நடைபெறுவதை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு வரை ஒத்தி வைக்கும் நடவடிக்கையில் சிலர் இறங்கியுள்ளனர்.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு வரை தேர்தலை ஒத்தி வைக்கும் உள்நோக்கத்துடனேயே மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை ஒழிக்கும் 20ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டு வருகின்றனர்.

எதிர்காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் போது, நாடாளுமன்றத் தொகுதிகளை வரையறை செய்ய எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமித்து அந்த அறிக்கை கிடைக்கும் வரை நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க முடியும். - என்றார். (ஐ)

### பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை ஒன்றிணைந்து முன்னெடுப்பது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் பங்கேற்று கருத்துக்களை வழங்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு முதலமைச்சர் அழைப்பு விடுத்திருந்தார். எனினும் முதலமைச்சரின் அழைப்பை ஏற்பதில்லை எனவும் கலந்துரையாடலில் பங்கேற்பதில்லை எனவும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்தது.

அவர்களின் இந்தச் செயற்பாடு தொடர்பில் கருத்துவெளியிட்டபோதே வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் துரதிஷ்டவசமாக இன்றைய கலந்துரையாடலுக்கு வராமல் விட்டுவிட்டார்கள். இது எங்களுக்கு மிகவும் மன வருத்தத்தைத் தருகின்றது. மாணவர்கள் எங்களுக்கு எதிரானவர்கள் அல்லர். பல்கலைக் கழகத்துக்கு ஊடாக வந்தவர்கள்தான் நாங்களும். ஆகவே அவர்கள் எங்களுக்கு எதிரானவர்கள் அல்லர்.

ஏதோ சில பிழையான கருத்துக்கள் அவர்களை ஆட்டிப் படைக்கின்றன நான் காண்கின்றேன். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்தும் எண்ணம் அவர்களுக்கு இருக்கின்றது என்றால், முதன்முதலில் எம்முடன் வந்து கலந்தாலோசித்திருக்கலாம். 2 - 3 மாதங்களுக்கு முன்னர் வந்து, இவ்வாறு நாம் செய்ய இருக்கின்றோம், எங்களுக்குச் செய்வதற்குப் பிரியமாக இருக்கின்றது எனக் கூறியிருக்கலாம். எங்களுடைய உறுப்பினர்களையும் சேர்த்து அவர்களுடன் பேசி, நாங்கள் அதனைக் கொண்டு நடத்தியிருக்கலாம்.

நாங்கள் செய்யப் போகின்றோம், எல்லோரும் வந்து சேருங்கள் என்று அவர்கள் கூறியது வருத்தப்படவேண்டிய செயல். ஏனெனில் ஒவ்வொருவரும் வந்து சொல்லலாம், நாங்கள் செய்கின்றோம் - நீங்கள் வந்து சேருங்கள் என்று.

உத்தியோகபூர்வமாகத்தான் நாம் இந்த விடயத்தில் உள்நுழைந்துள்ளோம். 3 வருடங்களாகச் செய்து வந்துள்ளோம். - அதனை முன்னெடுக்கும் காணி எமது அமைச்சின் கீழ் வருகின்றது. மாகாணத்தின் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற வகையில் எமக்கு அந்த உரித்து இருக்கின்றது. ஆகவே நாங்கள் உத்தியோகபூர்வமாக எமது கடமைகளைச் செய்துகொண்டிருக்கின்றோம்.

எனவே இதில் ஏதாவது திருத்தங்கள் செய்யவேண்டுமாயின் பல்கலைக்கழக மாணவர்கள் எம்முடன் வந்து பேசியிருக்கவேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யாதமை எமக்கு மன வருத்தமாக உள்ளது - என்றார். (ஐ-7)

### நன்னீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் கலந்துகொண்டு இவற்றை வழங்கினார்.

ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான 20 படகுகள், எட்டாயிரம் ரூபா பெறுமதியான 208 குல்லாக்கள், பன்னிரெண்டாயிரம் ரூபா பெறுமதியான 70 மீன் விற்கும் பெட்டிகள் மற்றும் 72 தராசுகள் என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அலுவலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஏமாற்றம் தரும் கொள்கைப் போக்கு

2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலோடு இந்த நாட்டில் ஒரு பெரிய மாற்றத்துக்கு நாட்டு மக்கள் ஆணை கொடுத்தார்கள்.

அந்த ஆணையின் அடிப்படையிலேயே தேசிய அரசு ஒன்று 'நல்லாட்சி அரசு' என்ற பெயரில் அதிகாரத்துக்கு வந்தது.

அது நடந்து சுமார் மூன்றரை ஆண்டுகளின் பின்னர், இப்போது தனது அரசின் கொள்கைப் பிரகடன அறிவிப்பை நாடாளுமன்றத்தில் விடுத்த நாட்டின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதில் புதுக் கதை விடுக்கின்றார்.

ஆட்சி முறை மாற்றத்துக்கே வித்திடும் வகையில் புதிய அரசியல் சீர்த்திருத்தம் ஒன்றைச் செய்வதற்கே 2015 ஜனவரி 8 இல் மக்கள் ஆணை பிறப்பித்தனர்.

அதில் பிரதானமானது புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துதல்.

அந்தப் புதிய அரசமைப்பு விடயத்திலும் கூட மூன்று பிரதான மாற்றங்களுக்கு அப்போது இணக்கம் காணப்பட்டது.

புதிய உத்தேச அரசமைப்பில் –

1.தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் ஒரு முறைமை உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

2.தேர்தர் முறைமை மறுசீரமைக்கப்பட்டு புதிய முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

3. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்பட்டு நாடாளுமன்றுக்குப் பதிலளிக்கக் கூடிய பிரதமரின் கீழான ஆட்சி முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

இந்த மூன்று விடயங்களையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகள் நல்லாட்சி அரசில் ஆரம்பிக்கப்பட்டனவாயினும், அவை இப்போது கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கி விட்டன. அவை முன் நகரும் அறிகுறிகளும் கூடத் தென்படவில்லை.

ஜனாதிபதி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய தமது நல்லாட்சி அரசின் எதிர்காலத் திட்டம் பற்றிய கொள்கை விளக்க உரையிலும் கூட இந்த முக்கிய விடயம் குறித்துத் தெளிவாகக் கருத்து ஏதும் இல்லை.

முன்னைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளின் பதவிக் காலத்தில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டனவே தவிர குறைக்கப்படவில்லை என்றும் –

தமது பதவிக் காலத்தில்தான் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டன என்றும் – குறிப்பிட்டு, தன்னைத் தானே பீற்றிக் கொள்ளும் விடயம் மட்டுமே ஜனாதிபதியின் இந்த உரையில் அமைந்திருந்தது.

மாறாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பான தெளிவான கருத்து நிலைப்பாடு எதனையும் அவர் தமது அரசின் கொள்கை விளக்க உரையில் பிரதிபலிக்கவேயில்லை.

இது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பது எனத் தானும் சேர்ந்து மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கரிசனை ஏதும் இல்லை என்பதையும் –

இன்னொரு தடவை அந்தத் தேர்தலில் நின்று தாமே வென்று, இன்னொரு பதவிக் காலத்துக்கு அந்த அதிகாரத்தை ருசி பார்த்தல் என்பதில் மட்டுமே அவருக்கு ஈடுபாடு உள்ளது என்பதையும் காட்டுகின்றது.

அது போலவே, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதத்தில் அரசமைப்பை மாற்றி அமைத்து, சிறுபான்மையினரான தமிழர்களுக்கு கணிசமான அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் கூட அவருக்குப் பெரிய ஈடுபாடோ, விருப்போ இல்லை என்பதையே அவரது அரசின் கொள்கை விளக்கப் பேருரை எடுத்தியம்புகின்றது.

தமது அரசு ஆட்சிக்கு வந்ததன் பிரதான நோக்கத்தைத் துறந்து, புதிய பல விடயங்கள் குறித்து அவர் இப்போது விவாதித்துப் பேச முற்பட்டிருக்கின்றார்.

அவரின் இந்த நிலைப்பாடு சிறுபான்மையினருக்கு– குறிப்பாகத் தமிழர்களுக்கு – பெருத்த ஏமாற்றத்தை தருவதாக உள்ளது.

இது தொடர்பில், தமிழர் பிரதிநிதிகளின் ஆக்ரோஷமான பிரதிபலிப்பை ஜனாதிபதியின் இந்தக் கொள்கை விளக்கப் பிரேரணை மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் ஆரம்பிக்கப்படும் போது நாம் காணக்கூடியதாக இருக்கும்.

கடந்த ஏழு தசாப்த காலமாக இந்த நாட்டையே சீரழித்து வரும் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான – நின்று நிலைத்து, நீடிக்க கூடிய – தீர்வு ஒன்றைக் காண்பதற்கான எந்த அடிப்படை விடயங்களையோ, காத்திரமான கருத்துக்களையோ கொண்டிராத இந்தக் கொள்கை விளக்கவுரை தமிழரைப் பொறுத்தவரை பெருத்த ஏமாற்றத்துக்குரியதே.

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கீச்சகப் பதிவு: ஊடகவியலாளருக்குச் சி.ஐ.டி. அழைப்பு

கொழும்பு, மே 10

ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கி அவரது ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ கீச்சகத்திலிருந்து (டுவிட்டர்) பதிவிடப்பட்டமை தொடர்பான தகவலைத் தனது உத்தியோகபூர்வ கீச்சகத்தில் வெளியிட்ட சர்வதேச ஊடகமான பி.பி.சியின் ஊடகவியலாளர் அசாம் அமீனைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அழைத்துள்ளனர்.

ஜனாதிபதி தனது கீச்சகத்தில் நாடாளுமன்றில் தான் ஆற்றிய கொள்கை விளக்க உரையின் ஒரு பகுதியைப் பதிவிட்டார்.

அந்தப் பதிவுக்குப் பதிலளித்துப் பதிவிட்ட ஜனாதிபதி ஊடகப் பிரிவு,

"நீங்கள் சிறந்த பேச்சாளர். ஆனால் உங்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்களைச் செயலில் காட்டுங்கள்" என்று குறிப்பிட்டிருந்தது.

அந்தப் பதிவு சில மணித்துளிகளில் நீக்கப்பட்டது.

இந்த நிலையில் உடனடியாகவே அறிக்கை வெளியிட்ட ஜனாதிபதி ஊடகப் பிரிவு,

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ கீச்சகப் பக்கம் 'ஹக்' செய்யப்பட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ கீச்சகத்துக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ கீச்சகப் பக்கம் மோசடியாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவித்திருந்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கீச்சகத்தால் பதிலளிக்கப்பட்ட விடயத்தைத் தனது கீச்சகத்தில் பதிவிட்டிருந்த சர்வதேச ஊடகமான பி.பி.சியின் கொழும்பு நிருபர் அசாம் அமீனுக்கு நேற்றுக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கான அழைப்பை விடுத்துள்ளனர். (ஐ)

## ரயில்வே தொழிற்சங்கத்தின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, மே 10

ரயில்வே தொழிற்சங்கங்கள் நேற்று நண்பகல் முதல் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் 40 நிமிடங்களில் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ரயில்வே தொழிற்சங்கம் முன்வைத்த கோரிக்கைகள் அடங்கிய மனுவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதையடுத்த தமது போராட்டம் கைவிடப்பட்டதாகச் சங்கத்தின் தலைவர் ஜனக்க பெர்ணான்டோ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள், ரயில் கட்டுப்பாட்டாளர்கள் , ரயில் சாரதிகள் மற்றும் ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணிப் புறக்கணிப்பை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தனர்.

அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஆகியோரது வாக்குறுதி காரணமாகப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று நண்பகல்வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று நண்பகல் ஆரம்பமான பணிப்புறக்கணிப்புப் போராட்டம் 40 நிமிடங்களில் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ஐ)

## மகிந்தானந்தவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஜூனில்



சட்டவிரோதமான முறையில் சம்பாதித்த 27 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி கொழும்பு, கிங்சி வீதியில் வீடொன்றை கொள்வனவு செய்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் துசித் முதலிகேவின் நெறிப்படுத்தலின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மஹிந்தானந்த அளுத்கமகேயின் சாரதியாகப் பணிப்புரிந்த வசந்த ராஜபக்ஷ என்பவரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வழக்கின் மேலதிக விசாரணைகள் எதிர் வரும் ஜூன் மாதம் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மஹிந்தானந்த அளுத்கமகே, பணச்சலவைச் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளார் எனத் தெரிவித்து சட்டமா அதிபர் இந்த வழக்கை தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மணல் கடத்திய இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாக மணலை ஏற்றிச் சென்ற குற்றத்துக்கு உழவு இயந்திரச் சாரதிகள் இருவருக்குத் தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மணலை அகழ்ந்து ஏற்றிச் சென்ற உழவு இயந்திரங்கள் இரண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் துர்நடத்தைத் தடுப்புப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டன. அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

சாரதிகள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரும் தம் மீதான குற்றச்சாட்டை மன்றில் ஏற்றுக்கொண்டனர்.

சாரதிகள் ஒவ்வொருவரும் 50 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும். அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட மணல் அரசுடமையாக்கப்படுகிறது. உழவு இயந்திரங்கள் இரண்டும் அவற்றின் பதிவு பெற்ற உரிமையாளர்களிடம் விடுவிக்கப்பட வேண்டும். – என்று நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ஐ)

## வீட்டுத் திட்ட உதவிகளை நேற்று வழங்கினார் வடக்கு முதலமைச்சர்



வடக்கு மாகாண முதலமைச்சர் சீவி.விக்னேஸ்வரனால் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு வீட்டுத் திட்ட உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சி.வீ.விக்னேஸ்வரனுக்கென குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்தே இந்த உதவிகள் நேற்று முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சரினால் வழங்கப்பட்டன.

இதேவேளை, வடக்கு முதலமைச்சரின் அலுவலகத்தில் வாராந்தம் நடைபெறும் பொது மக்கள் சந்திப்பின்போது வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்கள் தமக்கான வீட்டுத் திட்ட உதவிகளை வழங்க வேண்டுமென முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய அந்த மக்களது உண்மையான நிலைமைகளை ஆராய்ந்து முதலமைச்சர் செயலக அதிகாரிகள் சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே ஒன்பது இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்ட உதவிகள் நேற்று வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

### நாளை

11.05.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : பூரட்டாதி மு.ப.11.07 வரை
திதி : ஏகாதசி மு.இ. 9.15 வரை
சுபநேரம் : 5.54 – 7.24 வரை
இராகுகாலம் : 10.24 – 11.54 வரை

### விசேட நீதிமன்றத்துக்கான திருத்தச் சட்ட மூலத்தின் கீழ்

# முதற்கட்டமாக மூன்று நீதிபதிகளை கொண்டுள்ள விசேட மேல் நீதிமன்றம்!

கொழும்பு, மே 10

விசேட நீதிமன்றத்துக்கான திருத்தச் சட்டமூலத்தின் கீழ் ஆகக்கூடியது மூன்று விசேட மேல் நீதிமன்றங்களை அமைக்க முடியும்.

இருப்பினும் முதற்கட்டமாக மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஒரு விசேட நீதி மன்றம் நடைமுறைக்கு வரும் என்று நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.



விசேட நீதிமன்றம் மூலம் சமகால நல்லாட்சி அரசு எவரையும் பழிவாங்கப் போவதில்லை. குற்றம் செய்தவர்களுக்கு மாத்திரமே இதில் தண்டனை வழங்கப்படுமே தவிர இதன்மூலம் எவரையும் பழிவாங்க முடியாது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

அரசதகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அமைச்சர் தலதா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விசேட நீதிமன்றத்துக்கான திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். திருத்தச் சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் பட்சத்தில் பிரதம நீதியரசர் விரும்பினால் விசேட நீதிமன்றத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

விசேட நீதிமன்றத்தில் நாள்தோறும் வழக்குகளை விசாரித்து ஆகக் குறைந்தது ஒரு மாதத்தில் ஒரு வழக்குக்கான தீர்ப்பை வழங்கமுடியும்.

நீதிபதிகள் நினைத்தவாறு வழக்குகளை ஒத்திவைக்க முடியாது. நாள்தோறும் வழக்குகள் விசாரிக்கப்படும். ஏற்கனவே, விசாரணையிலுள்ள வழக்கு அல்லது இதுவரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாத வழக்கு என எந்த வோர் வழக்கும் விசேட நீதிமன்றத் திற்கூடாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம்.

அது லஞ்ச ஊழல் வழக்காகவோ அல்லது குற்றவியல் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகவோ இருக்கலாம். நீதிமன்ற திருத்தச் சட்ட மூலத்தில் முன்வைக்கப்பட்ட 12ஏ(1), (2), (7) ஆகிய சரத்துக்கள் அரசமைப்பின் 13 ஆவது சரத்துடன் முரண்படுகின்றன என உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தொடர்ந்து உயர் நீதிமன்றத் தால்சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ள. அவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள திருத்தச் சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்றும் அமைச்சர் தலதா அத்துக்கோரள கூறியுள்ளார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் டொக்டர். ராஜித சேனாரத்ன, ஜனாதிபதி தேர்தலின்போது வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற முடிந்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.- என்று கூறினார்.

(க)

# விவசாயிகளிடம் இருந்து பூசணிக்காயை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை

கொழும்பு, மே 10

நாட்டின் பல பிரதேசங்களில் பூசணிக்காய் உற்பத்தியை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்கள் தமது அறுவடையை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது என விவசாய அமைச்சுக்கு செய்திகள் கிடைத்துள்ளன.

இம்முறை பூசணிக்காய் அறுவடை அதிகரித்துள்ளது. அதற்கமைவாகச் சந்தையிலும் அதற்குரிய விலை கிடைக்காமையே தற்போதைய நிலைமைக்கு காரணமாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு பூசணிக்காயை உற்பத்தி செய்த விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர திறைசேரியிடம் கோரியிருந்தார்.

விவசாய அமைச்சரின் கோரிக்கைக்கு அமைவாக சில பிரதேசங்களில் மேலதிகமாக உள்ள பூசணிக்காய் அறுவடையை கொள்வனவு செய்வதற்காக திறைசேரியால் 50 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி தற்பொழுது இந்த மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பூசணிக்காய் அறுவடையை கொள்வனவு செய்து பொருத்தமான வகையில் சந்தைக்கு விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு விவசாய அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளது.

விவசாயிகள் அறுவடையை விற்பனை செய்ய முடியாதுள்ளமையால் மனம் தளர்வு ஏற்பட இடமிருப்பதால் அவர்களைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும். இதனால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உற்பத்தி நடைவடிக்கையின்போது விவசாயிகள் சந்தை மற்றும் கால நிலையைக் கவனத்தில் கொண்டு விஞ்ஞான ரீதியில் குறிப்பிட்ட உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விவசாய சேவைகள் திணைக்களத்தின் மூலம் வழிகாட்டல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய விவசாய அமைச்சராக பொறுப்பேற்றபின்னர் அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று கொழும்பில் அமைந்துள்ள விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தைப் பார்வையிட்டார். அங்கு இடம்பெற்ற பேச்சின் போது அமைச்சர் இந்த விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

# இராணுவத்தளபதி தலைமையில் சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு!

கொழும்பு, மே 10

முப்படை வீரர்கள், பொலிஸ் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு 110 சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக தலைமையில் நடைபெற்றது.

எம்.சீ.ஏ ஹமீட் ஹாஜியார் நற்பணி மன்றத்தின் இஸ்லாமிய ஆன்மிக வளர்ச்சி நிலையத்தின் ஏற்பாட்டில் சகல சமூகங்களுக்கிடையிலும் ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் கடந்த சனிக்கிழமை காலி முகத்திடலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பெரும்பான்மை மத மற்றும் இஸ்லாமிய சமூகங்களுக்கிடையே மத ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில், நற்பணி மன்றத்தின் தலைவர் எம்.சீ.ஏ ஹமீட் ஹாஜியார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயகவிடம் 15 லட்சம் ரூபா பெறுமதியான புதிய சக்கர நாற்காலிகளை வழங்கினார்.



2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 5 ஆவது தடவையாக இடம்பெறும் இந்த நன்கொடை நிகழ்வில் இராணுவ வீரர்கள், சிறுவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கும் சக்கர நாற்காலிகளைத் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சக்கர நாற்காலிகளைப் பெறுபவர்கள் நாடுமுழுவதுமுள்ள இராணுவம், பொலிஸ் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரால் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இந்த நிகழ்வில் 231 ஆவது படைப்பிரிவின் படைத் தளபதி பிரிகேடியர் செனரத் நிவுன் ஹெல்ல, சட்ட நடவடிக்கை பணிப்பாளர் ஏடிவடி ஜயசிங்க, சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

(கு)

# வான் மோதி சிறுவன் பலி

## பாலாவியில் சம்பவம்!

கொழும்பு, மே 10

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவிப் பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான் எனப் புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த வான் பாதையில் சென்று கொண்டிருந்த இந்தச் சிறுவன் மீது மோதியுள்ளது.

வானில் மோதுண்ட சிறுவன் பலத்த காயத்துக்குள்ளான நிலையில் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் சிறுவன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளான்.

விபத்தில் பலியான சிறுவன் புத்தளத்தைச் சேர்ந்த 11 வயதுடைய அசுது தனஞ்சய என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# மின் தடை

யாழ்ப்பாணம், மே 10

உயர் அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை –

**யாழ் பிரதேசத்தில்** – குடாரப்பு, செம்பியன்பற்று, மாமுனை, தாழையடி, மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், முள்ளியான், தாளையடி ஐஸ் தொழிற்சாலை, நாகர்கோவில் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில்** - சோலை, ஜெயபுரம், நாகபடுவான், பல்லவராயங் கட்டு ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்** - கனேசபுரம் கிராமம், ஓமந்தை ஒரு பகுதி, பாலமோட்டை ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில்** - முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன் பிட்டி, ஆத்திக்குளி, செம்மண்தீவு நெற்களஞ்சியம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

# 30 பாடசாலைகள் மத்தியில் மகளிர் கிரிக்கெட் போட்டி!

நாட்டிலுள்ள 30 பாடசாலைகள் மத்தியில் மகளிர் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான அங்கீகாரத்தை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் வழங்கியுள்ளது.

பெண்கள் மத்தியில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகிறது என ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் மகளிர் பிரிவுக்குப் பொறுப்பான அப்சாரி திலகரத்ன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பொறுப்பான அப்சாரி திலகரத்ன இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்-

பெணகள் பாடசாலைகள் மத்தியிலான மாபெரும் கிரிக்கெட் போட்டிகள் மகளிர் தேசிய அணி நோக்கி வீராங்கனைகள் கவர்ந்திழுக்கப்படுவதை ஊக்குவிக்கும்.- என்றார்.

# மீன்பிடி வலைகளை எரித்த குற்றச்சாட்டு: வெளிநாட்டவரின் கடவுச்சீட்டு முடக்கம்

யாழ்ப்பாணம், மே 10

உல்லாசப் பயணம் சென்ற இடத்தில் வலைகளை எரித்து நாசம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட - லண்டனில் வதிவிட உரிமைபெற்றவரை- நிபந்தனையுடனான பிணையில் விடுவித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

சந்தேகநபரின் கடவுச்சீட்டை முடக்கிவைக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

வெளிநாட்டவருடன் இந்தக் குற்றத்துக்குத் துணை நின்றனர்என்றகுற்றச்சாட்டில்மேலும் இருவர் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டனர். அவர்களையும் பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அரியாலைப் பகுதியிலுள்ள கடற்கரைக்கு லண்டனிலிருந்து வந்த நபரொருவரும் அவரது நண்பரும் ஓட்டோவில் சென்றுள்ளனர். அவர்கள் அங்கு பனைமரம் ஒன்றின் கீழே இறால் பிடிக்கும் வலைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தின் மத்தியில் நெருப்பு மூட்டி மீன்களைச் சுட ஆரம்பித்துள்ளனர்.

அவர்கள் மதுபானம் அருந்திக்கொண்டிருந்தமையை அவதானித்த வலை உரிமையாளர்கள் வலைகள் வைக்கப்பட்டிருந்தமையால் அந்த இடத்தில் நெருப்பு மூட்ட வேண்டாம் எனக் கேட்டுள்ளனர்.

எனினும் வந்திருந்தவர்கள் அதனை ஏற்காதமையுடன் தொடர்ந்தும் அவ்விடத்தில் இருந்துள்ளனர்.

வலை உரிமையாளர்கள் அவ்விடத்திலிருந்து சென்று சிறிது நேரத்தின் பின்னர் வந்து பார்த்த போது, 7 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் தீயில் எரிந்து நாசமாகிக் கிடந்ததைக் கண்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் விசாரணையில் வெளிநாட்டிலிருந்து வந்தவர் கைது செய்யப்பட்டார். அவர் யாழ் நீதிவான் நீதிமன்றில் கடந்த 3ஆம் திகதி முற்படுத்தப்பட்டார்.

அவரை நேற்றுமுன்தினம் 8ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார். அத்துடன், அவரது குற்றத்துக்குத் துணை நின்றனர் என்ற குற்றச்சாட்டில் ஓட்டோ சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபருக்குப் பிணை கோரி அவரது சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அதனை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபர்கள் மூவரும் பிணை முறியில் கையொப்பமிட்டு செல்லலாம், வெளிநாட்டவரின் கடவுச்சீட்டு நீதிமன்றால் முடக்கப்படுகின்றது என்று கட்டளையிட்டார். (ஐ-7)

# தினசரி ராசி பலன் (10.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரைத்திங்கள் 27 ஆம் நாள் வியாழக்கிழமை தசமித்திதி இரவு 11.28 மணி வரை பின்னர் ஏகாதசி. நட்சத்திரம்: சதயம் பகல் 12.11 மணி வரை பின்னர் பூரட்டாதி. மரணயோகம் பகல் 12.11 மணி வரை பின்னர் அசுப யோகம்.

**ராகுகாலம்** - பகல் 1.40 மணி முதல் 3.14 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.22 மணி முதல் 8.52 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - சித்திரை மாத தேய்பிறை தசமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - சதயம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** - இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். தூர தேசத்தில் இருந்து நற்செய்திகள் வரும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

**ரிஷபம்** - மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். தேக சுகம் பாதிப்புறும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதங்களுடன் நிறைவேறும்.

**மிதுனம்** - யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பூர்வீகச் சொத்துக்களால் வருமானம் அதிகரிக்கும்.

**கடகம்** - சலனம் மிகுந்த நாள். பணவரவு குறைவடையும். குடும்பச் செலவுகள் அதிகரிப்பதால் மனதில் தடுமாற்றம் ஏற்படும். உத்தியோகத்தர்கள் எவ்வளவு முயன்றும் தடை, தாமதங்களைத் தவிர்க்க முடியாது.

**சிம்மம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து பணிபுரிய வேண்டும்.

**கன்னி** - இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் நிரம்பிக் காணப்படும். பெண்கள் புதிய ஆடை, ஆபரணச் சேர்க்கையால் மகிழ்ச்சி அடைவார்கள். வியாபாரம் நன்கு செழிப்படையும்.

**துலாம்** - இணக்கமான நாள். தொழில் வியாபாரத்தில் பெரும் ஆதாயம் கிடைக்கப்பெற்று, பொருளாதார நிலை உயர் நிலை அடையும் வாய்ப்புண்டு. சகோதர உறவு வலுவடையும்.

**விருச்சிகம்** - சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். பெண்களுக்கு குடும்ப நிர்வாகத்தில் சிறு பிரச்சினைகள் தோன்றும். பயணத்தின் போது உடைமைப் பொருள்கள் தொலைந்து போக வாய்ப்புண்டு

**தனுசு** - சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். பெண்களால் சிலருக்கு நன்மைகள் உண்டாகும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். பெண்கள் சிலர் விரும்பிய மணம் முடிக்கும் இனிய வாய்ப்பைப் பெறுவார்கள்.

**மகரம்** - மகிழ்ச்சியான நாள். பொருளாதாரம் மன நிறைவைத் தரும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். வெளிநாட்டு உறவுகளிடமிருந்து விலையுயர்ந்த பரிசுப் பொருள்கள் வந்து சேரும்.

**கும்பம்** - உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். பெண்கள் குடும்பத்தில் பிரச்சினைகள் எதுவும் எழாத வண்ணம் மிக நல்ல முறையில் நடத்திச் செல்வார்கள்.

**மீனம்** - துன்பமான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் சலசலப்பு அதிகரித்துக் காணப்படும். மாணவர்கள் கல்வியில் கடும் முயற்சி எடுக்க வேண்டும். தொழிலில் பல இடைஞ்சல்கள் காணப்படும்.

சந்திராஷ்டம நாள்: புனர்பூசம் 4ஆம் பாதம்,பூசம் ,ஆயிலியம் ஆகிய பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.





யாழ். குருநகர் சென்றோக் சனசமூக நிலைய முதியோர் சங்கத்தினரின் ஈஸ்ரர் உயிர்ப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் பங்குபற்றிய முதியோர்களுக்கு ஜே/86 முதியோர் சங்கத்தின் செயலாளர் முகமது ஹம்ஸா பரிசு வழங்கிய வேளையில் … (இ-19)

# நாடு முழுக்க மின்தடை ஏற்படும் அபாய நிலை

கொழும்பு, மே 10

நாடு முழுவதும் மின்சார தடை ஏற்படலாம் என மின்சார சபை பொறியியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டனர்.

கலப்பு ஜெனரேட்டர் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மின்சாரச சபை பொறியியலாளர்கள் நேற்றுமுன்தினம் முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், போராட்டத்தை நிறுத்தி விட்டு மீண்டும் வழமையைப் போன்று பணியில் ஈடுபடுமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ரஞ்சித்சியம் பலாப்பிட்டிய, மின்சார பொறியியலாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை மின்சார சபையால் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை சமர்ப்பிக்கப்படுகின்ற கலப்பு ஜெனரேட்டர் திட்டத்துக்குப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைப்பது தாமதமாகியமையே இந்நிலைமைக்குக் காரணமாகும்.

அதற்காக விரைவான தீர்வு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ரஞ்சித் சியம் பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். எப்படியிருப்பினும் இதற்கு தீர்வு வழங்கும் வரை போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை என மின்சார பொறியியலார்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக மின்சாரம் தடைப்படக்கூடும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நுவர்வோருக்கு ஏற்படுகின்ற சிரமங்கள் தொடர்பில் அரசே பொறுப்புக் கூற வேண்டும் என அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் ஆதரவு!

## இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கூறுகிறார்

கொழும்பு, மே 10

இலங்கையின் நல்லிணக்க மற்றும் சீர்திருத்த முயற்சிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்குவோம் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டுங்லாய் மார்கியூ இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரங்களில் ஏற்படும் முன்னேற்றம் இலங்கையில் நிரந்தர சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் வழி கோலும் என ஐரோப்பிய ஒன்றியம் உறுதியாக நம்புகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



ஐரோப்பிய ஒன்றிய தினத்தை குறிக்கும் முகமாக கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்கியதன் காரணமாகவும் மீன்பிடித் தடையை நீக்கியதன் காரணமாகவும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சாதகமான மாற்றங்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இளைஞர் தவறான முடிவு!

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலில் தலையை வைத்து இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு சிலாபம் அளுத்வத்தப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ரயில்வே ஊழியர்களால் அந்த இளைஞரின் சடலம் சிலாபம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாடாளுமன்ற சம்பிரதாய அமர்வு மக்கள் பணத்தை வீணடிக்கும் செயல்

## ஜே.வி.பி. கூறுகிறது



கொழும்பு, மே 10

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சபை அமர்வு நிகழ்வு கால வீணடிப்பும், பொது மக்களின் சொத்தை விரயமாக்கும் ஒரு நடவடிக்கையும் ஆகும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக அரசு செய்துள்ள செலவு விவரத்தை வெளியிட வேண்டும் என்றும் அவர் சபாநாயகரிடம் நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதி நேற்றுமுன்தினம் தனது உரையில் காத்திரமான செயற்பாட்டு ரீதியிலான அறிக்கைகள் எதனையும் முன்வைக்கவில்லை. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை அமர்வு ஒரு வீணான நடவடிக்கையே அன்றி வேறில்லை.

தனது கட்சிக்குள் உள்ள முரண்பாட்டைச் சமாளிப்பதற்கே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார்.– எனவும் அவர் மேலும் குற்றம் சாட்டினார். (க)

# ஜனாதிபதி - பிரதமர் இடையில் தீவிரமடையும் முரண்பாடுகள்!

கொழும்பு, மே 10

சமகாலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பித்தன.

அதன் பின்னர் இடம்பெற்ற தேனீர் விருந்தில் கலந்துகொள்ளாமல் ஜனாதிபதி அங்கிருந்து சென்றுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையிலான அரசியல் விரிசலே இதற்குக் காரணம் என அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் சம்பிரதயமான தேனீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் அமைச்சரவை மாற்றத்தின் போது ஏற்பட்ட முரண்பாடுகளுக்கு இந்த பிணக்குக்கு காரணம் என்றும் அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு வவுனியாவில் தாகசாந்தி நிலையம்

கொழும்பு, மே 10

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் தாக சாந்தி நிலையம் அமைக்கப்பட்டது.



வவுனியா மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா, மன்னார் வீதியில் நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளையும் தாக சாந்தி நிலையத்தின் மூலம் பொது மக்களுக்கு குளிர்பானங்களும் வழங்கப்பட்டன.

# மண்சரிவு அபாயமுள்ள இடங்களிலிருந்து வேறு பகுதிகளுக்கு மக்கள் வெளியேற்றம்

கொழும்பு, மே 10

பதுளையில் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மண்சரிவு அபாயம் காரணமாக நேற்றுமுன்தினம் 8 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டனஎனப் பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ஈ.எல்.எம்.உதயகுமார தெரிவித்துள்ளார்.

அதிக மழையுடனான வானிலை காரணமாக ஹப்புத்தளை, தம்பே தென்ன மற்றும் மவுசாகலை பகுதிகளைச் சேர்ந்த 64 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

அதிக மழை காரணமாகத்திறக்கப்பட்ட உடவளவ நீர்த் தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் மூடப்பட்டுள்ளன என இலங்கை மகாவலி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் பூஜித குணசேகர தெரிவித்துள்ளார்.



இதேவேளை, மழையுடனான வானிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் தொடர்பிலான ஆய்வுக்கிணங்க மண்சரிவு அபாயம் நிலவும் 10 மாவட்டங்களுக்காக விசேட அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவில் 35 பேர் அடங்குகின்றனர் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சிரேஷ்ட புவியியலாளர் எச். எல்.எம்.இந்திர திலகதெரிவித்துள்ளார். இதற்கிணங்க மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களிலுள்ள மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அமைச்சரவை மாற்றம் தொடர்பில்

# வார இறுதியில் வர்த்தமானி அறிவித்தல்

கொழும்பு, மே 10

இந்த வார இறுதியில் அமைச்சரவை மாற்றம் மற்றும் அமைச்சுக்களுக்கான விடயதானங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தமுதலாம் திகதி அமைச்சரவை மறுசீரமைக்கப்பட்டிருந்த நிலையில் இது வரை ஒவ்வொரு அமைச்சுக்குமான விடயதானங்கள், அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள் என்பன தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவில்லை. இதன் காரணமாக அமைச்சுகளின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டுள்ளது எனப் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், இந்த விடயங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தயார்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்வார இறுதியில் அது வெளியிடப்படும் என்றும் ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார். (க)

# ஜனாதிபதி செயலகப் பிரதானி தொடர்ந்து விளக்கமறியலில்

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி ஐ.கே.மஹாநாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பி.திசாநாயக்க ஆகிய இருவரையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்க நேற்று உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றிடம் இருந்து 2 கோடி ரூபா லஞ்சம் பெற்ற குற்றத்துக்காக ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி பேராசியர் ஐ.கே. மஹாநாம மற்றும் அரச மரக்கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவர் பி.திசாநாயக்க ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# தமிழ் மக்களின் பேரழிவுக்கு காரணம் கூட்டமைப்பினரே!

## கடுமையாகச் சாடுகின்றார் சங்கரி!

எவரையும் இலகுவாகத்தமிழ் மக்கள் நம்புவார்கள் என்ற அவர்களின் பலவீனத்தை வைத்துக்கொண்டு எல்லாக் காலத்திலும் அவர்களை முட்டாள்களாக்கச் சிலர் நினைப்பது வேதனைக்குரிய விடயம். விடுதலைப் புலிகளால் தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதென மோசடியாக அப்பெயரை உபயோகித்துக் கொண்டு, தாம் செய்யும் அத்தனை விடயங்களுக்கும் விடுதலைப் புலிகளைச் சாட்சிக்கு அழைப்பது வேடிக்கையாக இருக்கின்றது என ஆனந்தசங்கரி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

2009 ஆம் ஆண்டு அரச படையினர் யுத்த தர்மங்களை மீறிச் செயற்பட்டு கிளிநொச்சியைக் கைப்பற்றியமையாலேயே அவ்வியக்கத்திற்கு எதிர்பாராத பின்னடைவு ஏற்பட்டமை அனைவரும் அறிந்ததே. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனம் சாதித்ததைத் தவிர வேறு எதையும் செய்திருக்கவில்லை. அதன் விளைவே மன்னார், வவுனியா, கிளிநொச்சி உட்பட முள்ளிவாய்க்கால் வரைக்கும் தம் சொத்துக்களைப் பெருமளவில் இழந்து ஏறக்குறைய வெறுங் கையுடன், பல கஷ்டங்களின் மத்தியில் முள்ளிவாய்க்காலில் நம் மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இக்கட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை, பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களைக் காப்பாற்றும்படியும், தவறினால் தங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்குமாறும் 11.01.2009 இல் பகிரங்க அறிக்கை மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி கோரியிருந்தது.

அவர்கள் கோரிக்கையைப் பொருட்படுத்தாத நிலையில்–

தம்பி பிரபாகரன் அவர்களுக்கு 15.03.2009 திகதியில் 81 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மக்களின் சாபத்திற்கு விடுதலைப் புலிகளோ, அவர்களின் சந்ததியோ ஆளாகாமல் இருக்க மக்களை விடுவிக்கும்படி கேட்டிருந்தேன். இறுதி மூச்சுவரை போராடுவதே இலட்சியமாக கொண்ட ஓர் அமைப்பு என்ற வகையில்-எனது இக்கோரிக்கைக்கு அவர்கள் செவி சாய்க்காமை பெரும் குற்றமாக எனக்குத் தெரியவில்லை.

ஆனால், தைமாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை அவர்களோ அல்லது 02.05.2009 அன்று அரசுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையையோ இரு சாராரும் பொருட்படுத்தவில்லை. ஆனால் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ஓர் நட்பு நாட்டின் உதவியைப் பெற்று போர்நிறுத்தத்தை உடன் அமுல்படுத்தாவிட்டால் நாடு பெரும் அனர்த்தத்தை எதிர்நோக்கும் என எச்சரிக்கை கொடுத்திருந்தேன். இதற்கிடையில் சகல தமிழ் கட்சித் தலைவர்களையும் 2009 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் திகதி 6.30 மணிக்கு அரசியல் நிலைமைகள் பற்றி ஆராய்வதற்காக ஜனாதிபதியால் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைத் தவிர ஏனைய கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் பல்வேறு விடயங்களுடன், யுத்த நிறுத்தம், உணவு பிரச்சினை போன்றவையும் ஆராயப்பட்டன. 55 ஆயிரம் மக்கள் வெளியேறி விட்டார்கள் என்றும், இன்னும் 85 ஆயிரம் பேர் மட்டுமே வன்னியில் விடப்பட்டுள்ளார்கள் எனவும் கூற, அதை மறுத்து மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் உணவின்றி கஷ்டப்படுகின்றார்கள் என்றேன் நான். எனது கூற்றை மறுத்துரைத்த ஜனாதிபதி, பின்பு மூன்று லட்சம் மக்களுக்கும் சேர்த்து அரசு உணவு அனுப்புவதாக மிக்க கோபத்துடன் என்னிடம் கூறிவிட்டு எழுந்து சென்றமை அனைவரும் அறிந்ததே.

11.04.2009 அன்று இந்திய வெளிவிவகாரச் செயலர் சிவ்சங்கர் மேனன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை உடன் டில்லிக்கு வருமாறு அழைப்பு விட்டிருந்த போது, அக்கடிதத்திற்குப் பதிலாக யுத்தத்தை நிறுத்தினால்தான் வருவோம் எனக் கூட்டமைப்பினர் அறிவித்திருந்தனர். அதைக் கண்டித்து 11.04.2009 இல் மாவை சேனாதிராஜாவுக்கு நான் எழுதிய கண்டனக் கடிதத்தில் வெளிவிவகார அமைச்சரைச் சந்திக்காத அவரது தவறைச் சுட்டிக்காட்டியிருந்தேன். அதே காலப்பகுதியில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுப் புலிகளின் தமிழீழக் கனவு பொசுக்கப்படும் என்று புது வருடச் செய்தியாக இராணுவத் தளபதியின் கூற்றும் பத்திரிகைகளில் பரவலாக செய்திகள் வெளிவந்திருந்தது.

இக்கட்டத்தில் மே மாதம் 7 ஆம் திகதி 2009 ஆம் ஆண்டு இலங்கை வந்த பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 'இந்யத் தேர்தல் முடிவடைந்ததும் பெரிய அழிவுக்கான அபாயம் உள்ளது எனவும், அப்பாவி மக்களை உலக நாடுகள் காப்பாற்ற வேண்டும்' எனவும் கூறினர் எனப் பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது.

எம் மக்களைக் காப்பாற்றத் தேடி வந்த வாய்ப்புக்கள் அத்தனையையும், விளைவுகளைச் சிந்திக்காது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, குறிப்பாக தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர்கள் தட்டிக்கழித்தனர். ஏனைய கூட்டமைப்பின் பங்காளிகள் எதுவும் செய்ய முடியாமல் தவித்தனர்.



முதலாவதாக, இவர்கள் தம் பதவிகளைத் துறந்து அரசுக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுத்துச் சில விடயங்களை சாதித்திருக்க முடியும். அடுத்ததாக, பெரும் அனர்த்தம் ஏற்படும் என கூட்டமைப்பினர் அறிந்திருந்ததோடு, நானும் அரசுக்கு எச்சரிக்கை விட்டிருந்தும் அரசும் அதைப் பொருட்படுத்தவில்லை. இதற்குக் காரணம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்ற இறுமாப்பு அரசாங்கத்திற்கு இருந்தது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை விருந்து வைக்க டில்லிக்கு அழைக்கவில்லை. அவசர அழைப்பை ஏற்று டில்லி சென்றிருந்தால் அவர்கள் அப்பாவி மக்களின் உயிர்களையும், போராளிகளையும் காப்பாற்ற நடவடிக்கை எடுத்திருக்க கூடும். அந்த முயற்சியையும் இவர்கள் எடுத்திருக்கவில்லை.

பிரித்தானிய நாடாளுமன்ற குழுவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்தபோது, அடுத்த 10 நாள்களுக்குள் பெரும் அழிவிற்கு இடமிருப்பது பற்றி நன்கு அறிந்திருந்தனர். ஆனால், உயிரழிவு 50ஆயிரத்துக்கு மேற்பட்டதாக இருக்கும் என இவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் அக்காலக் கட்டத்தில் தாங்கள் வெளிநாடு சென்றிருக்கவில்லை என்பதைத் தமது கடவுச்சீட்டுக்கள் மூலம் நிரூபிப்பார்களா? இத்தகைய பெரும் அழிவுக்கு முழுக்காரணமாக இருந்துவிட்டு இன்று உத்தமர்கள் போல அவர்கள் நடிக்கின்றமை வேடிக்கையாக உள்ளது. இச்சம்பவங்கள் தொடர்பில் எவருடனும் தகுந்த ஆதாரத்துடன் விவாதிக்கத் தயாராக உள்ளேன் என வெளிப்படையாகக் கூற விரும்புகின்றேன்.

இதன்பின் 18 ஆம் திகதி யுத்தம் முடிவடையும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொலைபேசிகள் எவருக்கும் இயங்க மறுத்த விடயம் உலகறிந்த உண்மை. ஏனை[illegible] விடயங்கள் தவிர்த்து இவ்வறிக்கையி[illegible] குறிப்பிடப்பட்ட விடயங்களை மட்டு[illegible] வைத்து ஆராய்ந்து பார்ப்பின் கடைசி நேரத்தில் இழந்த பல்லாயிரக் கணக்கான உயிர்கள், சொத்துக்கள் அத்தனைக்கும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாரென்று நான் கூற வேண்டியதில்லை.

ஆனால் எம்மினத்தின் காவலர்கள் என கூறிக்கொண்டு, ஏனைய சகல அமைப்புக்களையும் மட்டம் தட்டிச் செயற்பட்டுவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமது குற்றங்களை மறைப்பதற்காக இந்தியாவிலே அமைக்கப்பட்ட நினைவுச் சின்னம் போன்று முள்ளிவாய்க்காலில் அமைக்கப் போகின்றார்கள் என இப்போது தம்பட்டம் அடிப்பது பல்லாயிரக் கணக்கில் உயிரை இழந்த அப்பாவி மக்கள் மற்றும் போராளிகளையும் ஏளனம் செய்வதாக நான் கருதுகின்றேன்.

ஏனெனில், யுத்தம் நிறைவுக்கு வரும் இறுதிக் காலப்பகுதியில் இவர்கள் நடந்து முறையை அவதானிக்கும்போது, விடுதலைப் புலிகள் முற்று முழுதாக அழிக்கப்பட வேண்டும் எனக் கருதி இவர்கள் செயற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்க வேண்டி உள்ளது. இவர்களினுடைய கூத்துக்கு முடி சூடுவது போல எந்தத் தளபதி சபதம் செய்து போராளிகளை அழித்தமை மட்டுமல்லாமல், யுத்தம் முடிந்த பின்னர் இராணுவத்தினருடைய பலம் இரட்டிக்கப்பட வேண்டும் என கூறினாரோ அவருக்கு மக்கள் சிந்திய இரத்தம் காய முன்பே ஜனாதிபதித் தேர்தலிற்கு வாக்களிக்கும்படி ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்தமையை, தமிழ் இனம் இருக்கும் வரைக்கும் மறக்க முடியாது. இதற்காக இவர்கள் பணம் பெற்றுச் செயற்பட்டார்கள் எனக் கூறின் இவர்கள் மறுப்பார்களா? இத்தகைய துரோகங்களை ஒன்றன் பின் ஒன்றாக தமிழ் மக்களிற்கு இழைத்து அந்த வருடம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் வாழ்ந்த 7 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களில் 63ஆயிரம் வாக்காளர்கள் மட்டுமே இவர்களுடைய வேட்பாளருக்கு வாக்களித்த பின்பும் இவர்களுக்குத் தமிழ் மக்களின் முன் தோன்றுகின்ற தைரியம் எப்படி வந்தது எனக் கேட்கத் தோன்றுகின்றது.

உயிரிழந்த மக்களுக்குத் தூபி அமைக்கக் கூட்டமைப்பினர் முனைவது உலகில் வாழும் அத்தனை தமிழ் மக்களையும் பாதிக்கும் ஓர் ஈனச் செயலாக இவர்களுக்குத் தோன்றவில்லையா? அவ்வளவு தூரம் பதவி வெறி இவர்களுக்கு ஏறியுள்ளதா? ஆகவே அன்புள்ளம் கொண்ட தமிழ் மக்களுக்கு எனது தாழ்மையான வேண்டுகோள். எவரும் இவ்விடயத்தில் அரசியல் இலாபம் தேட முயற்சிக்காமல், சம்பவம் நடைபெற்ற இடத்தில் அமைதியான முறையில் நினைவு நாளை அனுஷ்டிக்க வேண்டும். தூபி அமைப்பது தொடர்பில் அரசியல் சார்பற்ற ஓர் பொது அமைப்பினர் பொறுப்பேற்பதே பொருத்தமாகும் என இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற இருவர் கைது!

மட்டக்களப்பு, மே 10

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகனேரி, புலிபாய்ந்தகல் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற இரண்டு சந்தேக நபர்களை நேற்றுமுன்தினம் வாழைச்சேனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக மணல் ஏற்ற பயன்படுத்திய இரண்டு உழவு இயந்திரங்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் பொண்டுகள் சேனை, வாகனேரி, ஆத்துச்சேனை புலிபாய்ந்தகல் போன்ற பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றுவதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சுற்றிவளைப்பின்போதே இந்தச் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாக வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்துள்ளார்.



# யாழ்ப்பாணத் தமிழ் அரசின் பாரம்பரிய மரபுரிமை சின்னமான

# மந்திரிமனை!

வல்வை.ந.அனந்தராஜ்

யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் அமைச்சருக்காக கட்டப்பட்ட மாளிகையே மந்திரிமனை என அழைக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் நல்லூர் கோயிலுக்குக் கிழக்கே 900 மீற்றர் தூரத்தில் பருத்தித் துறை வீதியில் சட்டநாதர் கோயிலின் தென்திசையில் சங்கிலியன் தோப்பும் அதற்கு எதிர்ப்புறமாக பழைய கட்டடமாகத் தோற்றமளிக்கும், அழகிய வேலைப் பாடுகளுடன் கூடிய புராதன அரசவாசஸ்தலமான மந்திரி மனையும் யாழ்ப்பாணத் தமிழரசின் சின்னமாக இன்றும் விளங்குகின்றன.



மந்திரிமனையும் அதனுடன் அமைந்துள்ள வளவுமாக 9 பரப்பு 10.60 குழி நிலப்பரப்பைக் கொண்ட ஆதனமானது, 02.03.2007 திகதியிடப்பட்ட 1486 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு உரியதாக உள்வாங்கப்பட்டிருந்தது.

1519 இல் செகராசசேகரன் முடிக்குரிய அரசானாக முடிசூடியதும், அவனுடைய பிரதம அமைச்சராக பரநிருப சிங்க முதலி பொறுப்பேற்றான். அவனுக்கான அரச வாசஸ்தலமாகவே இந்த மந்திரிமனை அமைக்கப்பட்டுள்ளது. சிங்கைப் பரராஜசேகரனினதும் (1478




– 1519) வள்ளியம்மை அரசகேசரியினதும் புதல்வனான பரநிருபசிங்க முதலி ஓர் இளவரசனாக இருந்தபோதிலும், வேறுவழியின்றி பிரதம அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தான். பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக இது இருந்ததால், இங்கேயே அரச சபையின் புலவர்களும், அறிஞர்களும் தங்கியிருந்தனர்.

அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்த நுழைவாயிலைக் கொண்ட மந்திரிமனை ஐரோப்பிய மற்றும் திராவிடக் கட்டட வடிவமைப்பைக் கொண்டதாக விளங்கும் இது. இரட்டைத் தன்மையான கட்டடக் கலை நிபுணத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது. இதன் பின்பகுதி திராவிடக் கட்டட வடிவமைப்பையும் முன் பகுதி பின்னர் டச்சுக்காரரால் நல்லூர் இராஜதானி கைப்பற்றப்பட்ட பின்னர் அவர்களது காலத்திற்குரிய டச்சுக் கட்டட வடிவமைப்பையும் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டதால், இன்றைய இரட்டைத்தன்மையானதோற்றத்தைக் கொண்டுள்ளது.

இக்கட்டடத்தில் காணப்படும் மரவேலைப்பாடுகளும், கபோத அமைப்பும் திராவிடக் கட்டட அமைப்பின் பின்னணியையும், வட்டவடிவான தூண்கள், மற்றும் வாசல் வளைவுகள் போன்றன ஐரோப்பிய கலை மரபுகளையும் கொண்டதாக விளங்குகின்றது. மந்திரிமனை இரண்டு மாடிகளைக் கொண்ட அழகிய பாரம்பரியமான கட்டட வடிவமைப்பைக் கொண்டு விளங்குகின்றது.

அதன் உட் பகுதி, மரவேலைப்பாடுகளினாலும், ஏனைய அலங்கார வேலைப்பாடுகளை உடையதாகவும் காணப்படுவது இம் மனைக்கு அழகூட்டுகின்றது. இம்மாளிகையின் வெளிப்புறமாக கிணறும் அதன் அருகே கொங்கிறீற்றினால் ஆன நீர்த் தொட்டியும் உள்ளது. அதன் உட்பகுதியில் இரகசிய சுரங்கப் பாதையும் இருந்ததுடன், இம் மனையின் பின்புறமாக மூடப்பட்ட நிலையில் உள்ள நிலவறை மண்டபமும் இருந்திருக்கின்றன. இவை பின்னர், முற்றாகவே அழிவடைந்து விட்டன.



யாழ்ப்பாணத் தமிழரசர்கள் நல்லூரில் அரசிருக்கைகள் அமைத்து கோட்டை கொத்தளங்களுடன் ஆட்சி நடத்தினர் என்பதற்கு இன்றும் யாழ்ப்பாணத்தில் காணப்படும் சங்கிலித் தோப்பு, யமுனா ஏரி, மந்திரி மனை, வீரமாகாளி அம்மன் கோயில், கோப்பாய் கோட்டை, பண்டாரக்குளம் ஆகியன சான்றுகளாக விளங்குகின்றன.



ஆனால் இன்று மந்திரிமனையும், சங்கிலியன் தோப்பும், யமுனா ஏரியும் மற்றும் அவற்றோடு சார்ந்த ஏனைய அரச சின்னங்களும் படிப் படியாக அழிவடைந்து பல ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த போதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் இவை மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப் பட்டு ஓரளவு பராமரிக்கப்பட்டு வந்தன.



அதேவேளை பிற்காலத்தில் நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி செகராசசேகரனின் கம்பீரமான தோற்றத்தைக் கொண்ட சிலை அன்று நல்லூருக்கு அழகூட்டிக் கொண்டிருந்தது. ஆனால், பின்னர் அதன் வடிவமைப்பும், தோற்றமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. முன்னர் இருந்த சிலையின் கம்பீரமான தோற்றத்தை இன்று காணமுடியவில்லை.

தற்பொழுது பொறுப்பேற்றுள்ள யாழ் மாநகர சபை சுற்றுச் சூழலைப் பேணி வருவதுடன் அவற்றைப் பிறரின் ஆக்கிரமிப்பில் இருந்தும் பாதுகாப்பதில் மாகாண சபையுடன் இணைந்து சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மந்திரிமனை அமைந்துள்ள காணியை அதன் தற்போதைய உரிமையாளராகிய சீனிவாசகம்பிள்ளை தம்பிப் பிள்ளை சமாதி நிதியத்தினர் வர்த்தகர் ஒருவருக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளனர். இந்த வர்த்தகர் மந்திரிமனை அமைந்திருக்கும் அக்காணியை கனரக வாகனங்கள் தரிப்பதற்குப் பாவிப்பதால் அம் மந்திரிமனையின் சூழல் பாதிக்கப்படுவதோடு மந்திரிமனையின் கட்டடமும் சேதமடையும் நிலையிலுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் அவற்றின் உரிமம் தொடர்பாக மந்திரிமனையும் அதனைச் சேர்ந்த காணியும் என்று குறிப்பிடப்படாமையினால் இக்காணியின் தர்மகர்த்தாக்கள் வியாபார நோக்கத்துக்காக இவ்வாறு நடந்து கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது துர்ப்பாக்கியமானது.

இவ்வாறு தமிழ் இராச்சியத்தின் எச்சங்களாக விளங்கும் மரபுரிமைச் சின்னங்களை வேறு எவரும் உரிமை கொண்டாடாத வகையில் மாகாண சபை அவற்றைப் பொறுப்பேற்று வடமாகாணத்தின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தி அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை இத்தகைய வரலாறுகளை எமது குழந்தைகளுக்கும் எடுத்துக் கூறிவர வேண்டியதும், அவற்றை அச்சுருவிலும், இறுவட்டுக்களிலும் பாதுகாத்துவருவதும் நம் ஒவ்வொருவரினதும் கடமையுமாகும். ★

## வீதி அமைத்துத் தாருங்கள்!

வித்தகபுரத்தில் நாம் மீளக் குடியமர்ந்து 8 வருடங்கள் கடந்தும் கொப்பிளாக் கடவை மயான வீதி போடப்படவில்லை. மயானத்தில் ஒருபகுதிக்கு மதில் கட்டப்பட்டு மூன்று பக்கங்களுக்கு முட்கம்பி வேலி உண்டு. மதில் கட்டும்போது ஒரு பக்கம் மட்டுமே கட்டி வீடுகளில் இருக்கின்றனர். மயானத்துக்கு வெயிலில் களைத்து வருபவர்களுக்கு ஒரு மண்டபம், கிணறு, எரியூட்டுமிடம் ஆகியவற்றுக்கு 14 இலட்சத்துக்கு மேல் செலவு செய்ததாகக் கூறுகின்றார்கள்.

மக்கள் மயானத்திலும் ஒழுங்கைகளிலும் கல்லுக் கிளறுகின்றார்கள். தயவு செய்து வீதி அமைத்துத் தருமாறு வேண்டுகின்றோம். அத்துடன் இலங்கை மின்சார சபையினரும் மூன்று தூண்களை நட்டு ஒரு வீட்டுக்கு மின்சாரம் விநியோகம் செய்துள்ளனர்.

இரண்டு தூண் நட்டு இன்னும் ஒழுங்கையில் உள்ள சந்திக்கு வெளிச்சத்தைக் கிடைக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமா? நான்கு தூண்களுக்கு மட்டும் வயரை இழுத்துவிட்டால் இரவில் பல விபத்துக்களைத் தவிர்க்க முடியும்.

கிராம முன்னேற்றச் சங்கத்தினர்
வித்தகபுரம், தெல்லிப்பழை

காலைக்கதிர் Kalaikkathir





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5

32

பகுதி - I

தரப்பட்டுள்ளவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரியவையாவை?

11) பத்திரிகை, பாடசாலை, சஞ்சிகை, நூலகம், புத்தகம்

1. பாடசாலையும் புத்தகமும்
2. புத்தகமும் நூலகமும்
3. நூலகமும் பாடசாலையும்

12) மாம்பழம், பணியாரம், அன்னாசி, பாற்சோறு, வாழைப்பழம்

1. பாற்சோறும் வாழைப்பழமும்
2. வாழைப்பழமும் பணியாரமும்
3. பணியாரமும் பாற்சோறும்

❖ கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

குளத்தில் தாமரை மலர்கள் மலர்ந்தனவே
பூவின் நறுமணம் திசையெங்கும் பரவியதே
வீசிய காற்று குளிரைத்தரவே
எம் உள்ளம் அசைந்ததே

உள்ளம் எங்கும் உவகை தோன்றவே
கையில் பூவை ஏந்திச் சென்று
மகனே உன் பெற்றோரை நீ வணங்குவாயானால்
ஒருபோதும் வாராதே தீங்கு

13) 'வீசிய காற்று குளிரைத் தரவே' என்பதன் கருத்து யாது?

1. வீசிய குளிர்ச்சியான காற்று
2. குளத்தில் நிறைந்த நீர்
3. பூக்களின் மணமுள்ள காற்று

14) 'உனக்கு வாராதோ தீங்கு' என்பதன் கருத்து யாது?

1. பெற்றோர்கள் உனக்கு தீங்கு செய்யமாட்டார்கள்
2. உனக்கு ஒருபோதும் தீங்கு ஏற்படமாட்டாது.
3. உனது வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.

15) ஒரு புகையிரத நிலையத்திலிருந்து புறப்படவுள்ள புகையிரதம் பற்றிய நேரசூசி கீழே காணப்படுகின்றது.

| பயணமுடிவுநேரம் | புறப்படவுள்ளநேரம் | | வேறுகுறிப்பு |
|---|---|---|---|
| | மு.ப | பி.ப | |
| மாத்தறை | 11.30 | .......... | 1மணித்தியாலம் தாமதம் |
| கண்டி | .......... | 12.15 | |
| காலி | 8.30 | .......... | |
| அநுராதபுரம் | 10.30 | .......... | இரத்துசெய்யப்பட்டுள்ளது |
| பதுளை | .......... | 3.00 | |

இந்நேர சூசிக்கு ஏற்பப் புகையிரத நிலையங்கள் புறப்பட்டன வெனின், அப் புகையிரத நிலையத்திலிருந்து புகையிரதங்கள் புறப்பட்ட ஒழுங்கு முறையை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. காலி – மாத்தறை – கண்டி – பதுளை
2. காலி – அநுராதபுரம் - கண்டி - பதுளை
3. காலி – கண்டி – மாத்தறை – பதுளை

16) ஒரு வகுப்பிலுள்ள நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் கீழே காணப்படுகின்றன.

சந்திரன் - 2001.01.24
விதுரன் - 2000.12.31
கீதா - 2001.08.31
ரேவதி - 2000.08.18

இதற்கேற்ப சரியான கூற்று

1. ரேவதி கீதாவிலும் மூத்தவள்
2. விதுரன் சந்திரனிலும் இளையவன்
3. கீதா சந்திரனிலும் மூத்தவள்

• பின்வரும் தகவல்களைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

| 1 kg சீனி+ 250 g தேயிலை | 250 g தேயிலை + 500 g விசுக்கோத்து | 1 kg சீனி+ 500 g விசுக்கோத்து |
|---|---|---|
| ரூபாய் 380 | ரூபாய் 230 | ரூபாய் 170 |


17) இவ் விலை யாது? 500 g தேயிலை + 1k g விசுக்கோத்து


1. ரூ. 230 2. ரூ 400 3. ரூ 460

18) 2 kg சீனி +500 g தேயிலை+ 1k g விசுக்கோத்து இவ் விலை யாது?

1. ரூ. 290 2. ரூ. 510 3. ரூ 350

19) வெற்றிடத்திற்கு பொருத்தமான உரு எது?








# சிறுவர் பொய்கை

## நிறம் தீட்டலாம் வாங்க





# குரங்கும் ஒற்றுமையற்ற பூனைகளும்

ஒருநாள் இரண்டு பூனைகள் சேர்ந்து ஒரு வீட்டிலிருந்து ஒரு அப்பத்தை எடுத்தன. அந்த அப்பத்தைச் சாப்பிடுவதற்காக இரண்டாகப் பிரிக்கும் போது ஒரு பூனை, அப்பம் சரி சமமாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று மற்றப் பூனையுடன் சண்டையிட ஆரம்பித்தது.

இரண்டு பூனைகளும் சண்டை பிடித்துக் களைத்துப் போயின. அதனால் தொடர்ந்து சண்டை பிடிக்காமல், யாரிடமாவது சென்று அப்பத்தைப் பங்கிடுவோம் என்று தீர்மானித்தன.

அதனால் இரண்டு பூனைகளும், அப்பத்தைப் பங்கு பிரிப்பதற்காக ஒரு குரங்கிடம் சென்றன. குரங்கும், அப்பத்தைச் சமமாகப் பிரிக்க ஒரு தராசை எடுத்து வந்தது.

அப்பத்தை இரண்டாக வெட்டித் தராசின் ஒவ்வொரு தட்டிலும் ஒவ்வொரு துண்டை வைத்து நிறுத்துப் பார்த்தது. தராசின் ஒரு தட்டு கீழே தாழ்ந்தது. அப்பொழுது குரங்கு, அந்தத் தட்டில் இருந்த அப்பத் துண்டை எடுத்து ஒரு கடி கடித்துத் தான் சாப்பிட்டு விட்டு மீதியை தட்டில் போட்டது.

இப்பொழுது, மற்றத் தட்டுக் கீழே தாழ்ந்தது. அந்தத் தட்டிலிருந்த அப்பத்தையும் குரங்கு எடுத்துக் கடித்து விட்டுத் தட்டில் போட்டது.

இப்படியே தட்டுகள் மாறி மாறித் தாழ்ந்தன. குரங்கும் மாறி மாறி அப்பத் துண்டுகளைக் கடித்துக் கடித்துச் சாப்பிட்டுக் கொண்டே இருந்தது.

இப்படியே அப்பம் குறைவதைப் பார்த்த பூனைகள், தங்கள் தவறை உணர்ந்து பங்கு பிரிக்க வேண்டாம் நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என்று மீதமுள்ள அப்பத்தைத் தரும்படி கேட்டன. ஆனால் குரங்கு, மீதமுள்ள அப்பம், தான் இதுவரை செய்த வேலைக்குக் கூலி, என்று சொல்லி விட்டு அதையும் வாயில் போட்டுக் கொண்டது.

ஒற்றுமையற்ற பூனைகள் வெட்கத்துடனும் வேதனையுடனும் திரும்பிச் சென்றன.

குழந்தைகளே! ஒரு பூனை யாவது கொஞ்சம் விட்டுக் கொடுத்திருந்தால் இத்தனை நஷ்டம் ஏற்பட்டிருக்குமா? விட்டுக் கொடுத்தல் பிறரிடம் நமக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுக்கும், இறைவனுக்கும் அதுவே பிடிக்கும்.



## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக் கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஜனாதிபதி உற்சவம் ஒன்றை நடத்தி உரையாற்றினார் - தினேஷ் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 10

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் புதிதாக எந்தவொரு விடயமும் இல்லை எனக் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

வெறுமனே நிகழ்வொன்றை நடத்தி நாடாளுமன்றத்தைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தமையே ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் எதுவும் விசேடமாக இல்லை. உற்சவம் ஒன்றை நடத்தி நாடாளுமன்றத்துக்கு வருகைதந்து உரையாற்றிச் சென்றமையே இடம்பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுப் புதிய அமர்வொன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதிகள், அரசால் முன்னெடுக்கப்படவுள்ள புதிய வேலைத்திட்டங்கள் அல்லது எதிர்காலச் செயற்றிட்டங்கள் பற்றியே குறிப்பிட்டிருந்தனர்.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரையில் ஒரு விடயமாவது புதியதாகக் குறிப்பிடப்படவில்லை.

அரசுக்குள் முரண்பாடு உள்ளது என்பதை ஜனாதிபதியே தனது உரையிலேயே கூறியிருந்தார் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(க)

## நச்சுத்தன்மையற்ற சேதனப்பசளை விவசாயத்தை மேம்படுத்தத் திட்டம்!

கொழும்பு, மே 10

நச்சுத்தன்மையற்ற சேதனப்பசளை விவசாயத்தை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாய அமைச்சு தெரிவிக்கையில்-

புதிய அமைச்சரவை திருத்தத்துக்கு பின்னர் விவசாய அமைச்சு சமர்ப்பிக்கும் அமைச்சரவை ஆவணத்தில் சேதனப் பசளை விவசாயத்தை ஊக்குவிப்பதனை இலக்காகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.

தற்பொழுது இலங்கையில் சேதனப் பசளை விவசாயத்தின் கீழ் 3801 விவசாயிகள் நெல் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சேதனப்பசளை விவசாயத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் நெற் காணிகள் 4955 ஹெக்ரேயர் ஆகும்.

பாரம்பரிய உள்ளூர் நெல் வகைகள் பலவற்றை விவசாயிகள் உற்பத்தி செய்வதுடன் இந்த அரிசிக்கு உள்ளூர் சந்தையில் ஆகக்கூடுதலான கேள்வி உண்டு.

விவாசயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படுகிறது என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

*களுத்துறையில் நிர்மாணிக்கப்பட்ட*

## விபத்து சிகிச்சை பிரிவு மக்களிடம் கையளிப்பு

கொழும்பு, மே 10

களுத்துறை அரச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசரசிகிச்சை பிரிவு இன்று பொது மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதற்காக அரசால் 916 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது.

உலக வங்கி நிவாரணக் கடன் உதவி மற்றும் இலங்கை அரசின் நிதியுதவி இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு சத்திர சிகிச்சைப் பிரிவுகள் 24 மணித்தியாலமும் செயற்படும் வகையில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

விடுதித் தொகுதியொன்றையும் சத்திர சிகிச்சை புதிய பிரிவையும் இது கொண்டுள்ளது. இந்தச் சிகிச்சை பிரிவுக்கு நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. சுகாதாரம் போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தலைமையில் இன்று இது பொது மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

## மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு; இராணுவச் சிப்பாய் ஒருவர் பலி!

மட்டக்களப்பு, மே 10

இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு வாகரை பனிச்சங்கேணியில் உள்ள இராணுவ முகாமில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தத் தகவலை வாகரைப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை 4.10 மணியளவில் இந்த இராணுவ முகாம் காவலரணில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இந்தக் காவலரணில் காவல் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கந்தளாய் ஜயந்திபுரம் பகுதியைச் சேர்ந்த பி.ஆர்.எம். நளீன் சஞ்சீவ (வயது 34) என்ற சிப்பாயே உயிரிழந்துள்ளார். சிப்பாய் தனக்கு தானே துப்பாக்கிப் பிரயோகம் செய்து தற்கொலைசெய்துகொண்டுள்ளார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்று தெரிவித்த பொலிஸார் இவருடன் இணைந்து செயற்பட்ட ஏனைய சிப்பாய்கள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த சிப்பாயின் சடலம் உடற் கூறாய்வுக்காக வாகரைப் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

## புப்புரஸ்ஸ நியூபொரஸ்ட் தோட்டத்தில் 15 வீடுகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

கொழும்பு, மே 10

புப்புரஸ்ஸ நியூபொரஸ்ட் தோட்டத்தில் 15 தனிவீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் நிதியொதுக்கீட்டில் இந்த வீடுகள் அமைக்கப்படவுள் ளன.



இந்த நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சருமான பழனி திகாம்பரம், அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, தமிழ்முற்போக்குக்கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார், மத்திய மாகாணசபை உறுப்பினர் எஸ்.ராஜாரட்ணம் மற்றும் மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் புத்திரசிகாமணி உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

## தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி பயிற்சி முகாம்!

கொழும்பு, மே 10

இலங்கைக் கல்வி அமைச்சு பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து நாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் உள்ள மாணவச் சிப்பாய் படையணிகளுக்கு (கடேற்) பயிற்சி வழங்கும் வேலைத் திட்டத்தை ரந்தம்பே இராணுவப் பயிற்சி முகாமில் நடந்து வருகின்றது.



முதற்கட்டமாக அம்பாறை, மட்டக்களப்பு, மொனராகலை ஆகிய மாவட்டங்களின் 48 பாடசாலைகளைச் சேர்ந்த 1835 கடேற் படையணி மாணவர்களுக்கு 10 நாள் பயிற்சி தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

கடேற் மாணவர்களுக்கான சகல வசதிகளும் இராணுவப் பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டுள்ளன.

கடேற் மாணவரிடையே தலைமைத்துவம், ஒழுக்கம், நேரமுகாமைத்துவம், தாங்குதிறன் முதலான பல தேர்ச்சிகளை வளர்க்கும் நோக்குடன் இப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் செயற்பட்டு வரும் கடேற் மாணவச் சிப்பாய் படையினர் அனைவருக்கும் கட்டம் கட்டமாக பத்துநாள் பயிற்சி வழங்கப்படும் என்று அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்தி எம் மக்களின் கனவை நிறைவேற்றுவோம்

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 10

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைப் பேரெழுச்சியுடன் நடத்துவது என நாம் திட்டமிட்டதன் பிரகாரம் மக்கள் கனவை நிறைவேற்றியே தீருவோம். இதற்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்.

இதில் பல்கலைக்கழக அனைத்துப்பீடங்களின் மாணவர் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழில்நுட்பக் கல்லூரிகளின் மாணவ பிரதிநிதிகள் மற்றும் கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவப் பிரதிநிதிகளும், கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றிரவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து பங்கு கொள்ள வேண்டும். அனைவரும் அகவணக்கம் செலுத்த வேண்டும். எமது தமிழ் இனத்தின் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும் எனும் உயர்ந்த நோக்கம் கொண்ட சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பதற்காகவே மாணவர்களும் பொது மக்களும் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாடுகளைச் செய்த வண்ணம் உள்ளோம்.

ஆனால் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகள் தமது அதிகாரத்தை வைத்துக்கொண்டு மாணவர்களின் தூரநோக்குடனான செயற்பாடுகளுக்குத் தடைகளை ஏற்படுத்த முனைகின்றமை தமது சுயலாப அரசியலுக்காகவே இளைய சமுதாயம் அரசியல் விடயங்களிலும் உணர்வுபூர்வமான விடயங்களிலும் நுழைந்து விடக்கூடாது என்பதற்காக மாணவர் சமுதாயத்தினதும் பாதிக்கப்பட்ட சமூகத்தினதும் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுக்கின்றனர்.

ஆனால் மாணவர்களும் மக்களும் இந்தச் சதித்திட்டத்திற்கு இடமளிக்கமாட்டார்கள். அந்த வகையிலிலேயே எதிர்வரும் மே 18 பேரவல நினைவேந்தலை யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக அமைப்பு என்பன இணைந்து சிவில் சமூக அமைப்புக்களையும் இணைத்துக்கொண்டு எந்தவித வேறுபாடுமின்றித் தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு - கிழக்கு மக்களின் பேரெழுச்சியுடன் மறுக்கப்பட்ட நீதிக்காக உரிமை கோரும் நினைவேத்தலாக எழுச்சி பெற வேண்டும் என்னும் பேரவாவுடன் ஒழுங்கு செய்துகொண்டிருக்கிறோம்.

சிலர் கேட்கலாம் வடக்கு - கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஏன் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை பொறுப்பேற்க வேண்டும் என்று. காரணம் யாதெனில் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுக் கல்வியால் - பொருளாதாரத்தால் - பதவிகளால் - வேலைவாய்ப்புக்களால் இலங்கை அரசு படிப்படியாக அடக்கி ஒடுக்கி வந்தது.

இந்தச் சூழ்நிலையில்தான் சாத்வீகப் போராட்டங்களை இரும்புக் கரங்களால் அரசு நசுக்கிவிட்டது.

இந்நிலையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு விசுவாசத்துடனும் அர்ப்பணிப்புடனும் அவர்கள் தமிழ்ப் பொதுமக்களை ஒரே தமிழினமாக ஒன்று திரட்டித் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடினார்கள்.

இதற்காக அரசியல்வாதிகளையும் கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைத்து சர்வதேச ஆதரவினையும் பெறத்தக்க வகையில் போராட்டத்தை நகர்த்திச் சென்றிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் ஆயுதப் பேராட்டம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டுச் சர்வதேசத்தின் உதவியுடன் பேரினவாதம் மேற்கொண்ட கொடிய போரின் விளைவாக முள்ளிவாய்க்கால் மண்ணில் மௌனிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் எந்த வித வேறுபாடும் இல்லாது மக்களோடு மக்களாக இணைந்து மக்களின் உரிமைக்கும் அபிலாஷைகளுக்கும் மதிப்பளித்து உயிர்கள், உடல் உறுப்புக்கள், இளமைக்கால வாழ்க்கை போன்ற தியாகங்களைச் செய்து மக்களுக்காகவே தம்மை அர்ப்பணித்து முள்ளிவாய்க்காலில் மௌனித்தார்கள்.

அந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிகராக மக்களை ஒன்றுதிரட்ட - மக்களைத் தலைமை தாங்க அதுவும் குறிப்பாக இந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தை ஒழுங்கமைத்து நடத்தவோ, தலைமை தாங்கவோ நீங்கள் தகுதியுடையவர்களா என்று ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிகளும் குறிப்பாக வடக்கு மாகாண சபை அங்கத்தவர்சளும், உங்கள் மனச்சாட்சியைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தமது உறவுகளை இழந்து பல வலிகளைச் சுமந்த தமிழ் மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது வடக்கு - கிழக்குத் தாயக மாணவர் சமூகத்தின் வேண்டுகோளாகும். மாறாக அரசியல்வாதிகளோ அரசியல் தலைமைகளோ இதனைப் பொறுப்பெடுத்து நடத்துவது பொருத்தமற்றது.

எனவே மக்களின் அரசியல் பிரதிநிதிகளான தாங்கள் குறிப்பாக வடக்கு மாகாணசபை, கிழக்கு மாகாண சபை சார்ந்த அரசியல்வாதிகள் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்படுகின்ற இந்த முள்ளிவாய்க்கால் பேரவல நினைவேந்தலில் மக்களோடு சேர்ந்து கலந்துகொள்ளுங்கள். மாறாக மக்களின் பேரவலத்தைச் சந்தித்த முள்ளிவாய்க்கால் மண்ணில் அரசியல் லாபத்தைத் தேட முயற்சி செய்யாதீர்கள்.

### எமது நோக்கம்

தமிழர்களின் ஒற்றுமையை தமிழ் மக்களை எந்தவித வேறுபாடுகளுமின்றி ஒன்றிணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நிகழ்த்துவதன் மூலம் சர்வதேசத்திற்கு ஓர் செய்தியை எடுத்துக் கூற வேண்டும்.

அரசியல் கலப்பு இன்றிப் புனிதமாக இந்த அவல நாளை நினைகூர வேண்டும்.

மக்களின் இழப்பில் எவரும் அரசியல் செய்யவோ பதவிகள் பெறவோ இடமளிக்கக்கூடாது.

என்ன காரணத்திற்காகத் தமிழினம் இந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் பேரிழப்பைச் சந்தித்ததோ அந்த உரிமையைப் பெறுவதற்கு அந்தப் புனித நாளில் எந்தக் களங்கமும் ஏற்பட்டுவிடக்கூடாது.

இவற்றைக் கருத்திற்கொண்டு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தற்போதைய சூழ்நிலையில் தனது தார்மீகப் பொறுப்புபை உணர்ந்துகொள்கிறது.

அந்தவகையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அளப்பரிய பங்காற்றி நிற்கின்றது. அதிகளவான உயிர்த் தியாகங்களைச் செய்தும் ரத்தம் சிந்தியும் இன்றுவரை பின் நிற்காது செயற்பட்டு வருகிறது. பேரினவாத அடக்குமுறைக்குள்ளும் மாவீரர் நாள், தமிழீழ எழுச்சி நாட்கள், தமிழீழப் போராளிகள் மற்றும் தியாகிகளின் நினைவு நாள்களை நினைவுகூர்ந்து வந்துள்ளதுடன் இதற்காகப் பல மாணவர்கள் சிறைகளுக்குள் சென்றும் மீண்டுள்ளனர்.

தமிழ் மக்களின் அரசியலில் ஏற்படும் முடிவுகளில் பெரும் தாக்கத்தைச் செலுத்தத்தக்க வகையில் மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் காலம் காலமாக இருந்து வருகின்றன.

பௌத்த திணிப்பிற்கு மத்தியிலும் யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழர்களின் போராட்ட நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்து வருவதோடு அவற்றை நிர்மாணிக்கும் பணிகளில் மாணவர் ஒன்றியத்தின் பங்களிப்பு அளப்பரியது.

எனவே தற்போது இருக்கும் மந்தமான அரசியல் போக்கினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வடக்கு மாகாண சபைதான் நடத்த வேண்டும் எனும் முறைமையை நடைமுறைப்படுத்தினால் அது எதிர்காலத்தில் தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கு ரீதியாக எழுச்சி கொண்டு தமது உரிமையை வென்றெடுப்பதனைக் கேள்விக்குறியாக மாற்றிவிடும்.

எனவே அரசியல்வாதிகளை விட மக்கள் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மாணவர்கள் அதிகளவு கரிசனையோடு ஈடுபாடு கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்கள். அந்த வகையில் அரசியல் பலம் என்பதற்கு அப்பால் மாணவர் சக்தி மாணவர் ஒன்றுபட்ட பலத்தினைக் கொண்டு மக்களை ஒருங்கிணைத்து வடக்கு - கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து ஒழுங்கமைக்கும் நினைவேத்தல் நினைவுக்கு வடக்கு மாகாணசபை இடையூறு இல்லாமல் ஆதரவை வழங்க வேண்டுமென்பதற்காக நாம் இரண்டு தடவைகள் அலுவலக ரீதியாக முதலமைச்சரைச் சந்தித்து அன்புரிமையோடு கேட்டிருந்தோம். ஆனால் மாணவர்களாகிய எமது கோரிக்கையுடன் உடன்படாமல் நிராகரித்துக் கொண்டார்.

இதன் தொடர்ச்சியாகக் கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை கலந்துரையாடுவோம் என வரச் சொல்லிவிட்டு எம்மோடு எந்தவிதத்திலும் எமது கருத்தைச் செவிமடுக்காமல் தம் ஏற்கனவே எடுத்துக் கொண்ட தீர்மானத்தை எமக்குத் தெரிவித்தனர்.

அதன் தொடர்ச்சியாக எமக்கு அவர்களது தீர்மானத்தில் உடன்பாடு இல்லாத காரணத்தினால் இன்று புதன்கிழமை (நேற்று) நடந்த மாகாண சபையின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மாநாட்டில் நாம் கலந்து கொள்ளாமல் தவிர்த்திருந்தோம்.

மேலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவே நாம் வடமாகாண சபை இதனைப் பொறுப்பெடுத்து நடத்துவது பொருத்தமற்றது எனக் கூறிவருகின்றோம்.

அத்தோடு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இந்நிகழ்வினை ஒழுங்கமைக்க கேட்பதைப் போல் ஒவ்வொருவரும் வந்து கேட்கலாம் என கூறுவது சரியான பாதையை மாற்றுவதற்கான செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். ஆனால் சம்பந்தப்பட்ட தரப்பினர் உண்மையை உணர்ந்து மாணவர்களால் ஒழுங்கமைக்கப்படும் மக்கள் எழுச்சிக்கு ஆதரவு வழங்குவதனை விடுத்து உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிடுவதனை நிறுத்திக் கொள்ளவேண்டும் என மாணவர் ஒன்றியம் வேண்டிக்கொள்கின்றது - என்றுள்ளது.

(ஐ-7)

---

# முதல்வரின் புரிதலால் மாணவர் ஒன்றியமும் வருத்தம்

"தமிழர்கள் ஒன்றுபடுவதை விரும்பாத தீயசக்திகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பற்றி முதலமைச்சரிடமும் மாகாண சபையினரிடமும் தவறாகக் கூறியதாலோ என்னவோ மாணவர் ஒன்றியத்தின் உள்ளார்ந்தக் கோரிக்கையை அவர்கள் புரிந்துகொள்ளத் தவறியுள்ளனர் என்பதை மன வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்."

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கிருஸ்ணமேனன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு விடயத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடு மன வருத்தமளிப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நேற்றுப் பிற்பகல் தெரிவித்திருந்தார்.

முதலமைச்சரின் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் நேற்று மாலை செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முள்ளிவாய்க்கால் பேரவலமானது வெறுமனே வடக்கு மாகாணம் தழுவியதாக இல்லை. வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தின் 8 மாவட்ட மக்களையும் அணைத்துக்கொண்டு செய்யவேண்டிய நினைவேந்தல் நிகழ்வாகும்.

அந்தவகையில் நாம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு கடந்த மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மண்ணிலிருந்து பகிரங்க அழைப்பு விடுத்திருந்தோம். அனைவரையும் ஒன்றிணையும்படி அந்த அழைப்பை விடுத்திருந்தோம்.

கடந்த ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் நான்கு தரப்புகள் நினைவேந்தல் நிகழ்வை நடத்தியிருந்தன. அந்தத் தரப்புகளை அழைத்து நாம் பேச்சு நடத்தியிருந்தோம்.

இந்த ஆண்டு பிரிந்துநின்று நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தக் கூடாது. ஒன்றிணைந்து ஒரே நிகழ்வாக நடத்துவோம். அதற்குப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் நடுநிலையாளராக - மாணவர் சக்தியாக நின்று ஒழுங்குபடுத்துகின்றோம் என்று அந்தத் தரப்புகளிடம் வலியுறுத்தினோம்.

அவர்களில் முக்கியமாகக் கடந்த ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னின்று நடத்திய வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனைச் சந்தித்துப் பேசியிருந்தோம்.

அனைவரும் ஒன்றிணைந்து நினைவேந்தலை செய்தால் எனக்கு முழுமையான நிறைவு தம்பிமார் என்று அவர் எம்மிடம் தெரிவித்தார்.

அந்த நம்பிக்கையோடு நாம் முதலமைச்சரைச் சந்திக்க அணுகிய போது, அவர் நாட்டில் இருக்கவில்லை.

அதனால் ஒரு மாதகாலத்துக்குள் இந்தப் பேரமுச்சியை ஒழுங்கமைக்க வேண்டும் என்ற பெரும் சுமையுடன் பணியாற்றினோம்.

முதலமைச்சர் நாடு திரும்பியதும் அவசர அவசரமாக நாம் சந்தித்தோம். அவருடன் சுமார் 30 நிமிடங்கள் கலந்துரையாடினோம்.

எமது நோக்கம் என்ன - எதற்காக நாம் இந்தப் பணியை முன்னெடுக்கின்றோம்? என்பதை அவரிடம் எடுத்துக் கூறியிருந்தோம்.


முக்கியமாக அரசியல் நோக்கமில்லை. உங்களுடைய பதவிக் காலத்தில் இந்த நிகழ்வை மக்கள்மயப்படுத்துங்கள். மக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வில் அவர்களின் பிரதிநிதியாக - முதலமைச்சராக நீங்கள் பங்கேற்பதுதான் சாலப்பொருத்தமாக இருக்கும் என்பதையும் அவரிடம் எடுத்துக் கூறியிருந்தோம்.

அரசியல் சார்ந்த சபையான வடக்கு மாகாண சபை நினைவேந்தலை ஒழுங்கமைத்தால் அதனை ஆட்சி செய்யும் கட்சியின் அரசியல் நலனுக்காகச் செய்யப்படுவதாக வெளியே உள்ள தரப்புகள் கொள்கை ரீதியாக உடன்பட மாட்டார்கள். ஆனால் மாணவர் சக்தி மக்களுடன் இணைந்து முன்னெடுக்கும் போது, அனைத்துத் தரப்புகளும் தமிழர் ஒற்றுமைக்காக ஓரணியில் நிற்பார்கள். அது மாபெரும் சக்தியாகச் சர்வதேசத்துக்குச் செய்தியைச் சொல்லும் என்ற விடயத்தின் அடிப்படையிலேயே நாம் முக்கிய பங்காற்றினோம். - என்றார். (ஐ-7)

# தமிழக நிதித்துறை தொடர்பில் முதல்வர் தீவிர ஆலோசனை!

நிதித்துறையின் செயற்பாடுகள் குறித்து தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் ஆலோசனைக் கூட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

முதல்வர் தலைமைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இக் கூட்டத்தில், துணை முதல்வரும் நிதியமைச்சருமான ஓ.பன்னீர் செல்வம், நிதித்துறைச் செயலாளர் மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோர் பங்கேற்றனர்.



நிதி நிலமை, திட்டச் செலவீனம், புதிய திட்டங்கள் போன்ற விடயங்கள் இதன்போது விரிவாக ஆலோசிக்கப்பட்டுள்ளது.

15ஆவது நிதிக்குழுவின் திட்டங்களில் தமிழகத்தின் தேவைகள் குறித்து புதியதொரு திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளதாக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், 15ஆவது நிதிக் குழுவில் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தமிழகத்திற்கு தேவையானவையல்ல என, எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை முன்வைத்துள்ளன.

இவ்வாறான நிலையில், நேற்று நிதித்துறையினருடன் மேற்படி ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கர்நாடக தேர்தல்:

# வாக்காளர் அட்டைகள் 10 ஆயிரம் பறிமுதல்!

### நள்ளிரவில் நடந்த பரபரப்பு அரசியல்

கர்நாடகச் சட்டப்பேரவைத் தேர்தலுக்கு ஒரு சில நாள்களே உள்ள நிலையில், அங்கு ஒரே தொகுதியில் இருந்து 10 ஆயிரம் போலி வாக்காளர் அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து பா.ஜ. கவும், காங்கிரஸும் நள்ளிரவில் ஊடகவியலாளர்கள் சந்திப்பை நடத்தி பரபரப்பை ஏற்படுத்தின.

கர்நாடக சட்டப் பேரவைக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறவுள்ளது. மொத்தமுள்ள 224 சட்டப் பேரவைத் தொகுதிகளில் 223 தொகுதிகளுக்குத் தேர்தல் நடைபெறவுள்ளது.




இந்த நிலையில், பெங்களூர் ராஜ ராஜேஸ்வரி நகரில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இருந்து 10 ஆயிரம் போலி வாக்காளர் அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் அதிகாரிகள் அந்த வீட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு அதிரடிச் சோதனை செய்து போலி வாக்காளர் அடையாள அட்டைகளைக் கைப்பற்றினர்.

இதையடுத்து பா.ஜ.க சார்பில் நள்ளிரவு நேரத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. அந்த வீடு காங்கிரஸ் நிர்வாகிக்குச் சொந்தமானது. எனவே காங்கிரஸ் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளது என பா.ஜ.க. புகார் கூறியது. மேலும் அந்தத் தொகுதியில் தேர்தலை ஒத்தி வைக்கவேண்டும் எனவும் பா.ஜ.க. சார்பில் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளிக்கப்பட்டது.

இதற்கு பதிலடியாக காங்கிரஸ் நிர்வாகிகளும் உடனடியாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். போலி வாக்காளர் அட்டை மோசடியில் ஈடுபட்டது. பா.ஜ.க. எனவும், அதற்கான ஆதாரம் தங்களிடம் இருக்கின்றது எனவும் குற்றம்சாட்டினர்.

# உலகின் சக்தி வாய்ந்த மனிதர்களின் பட்டியலில் மோடிக்கு 9 ஆவது இடம்!!



இந்த வருடத்தின் (2018) உலகின் சக்தி வாய்ந்த மனிதர்களின் பட்டியலைப் பிரபல பத்திரிகையான போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதில் சீனாவின் ஜனாதிபதி ஜீ ஜின்பிங் உலகின் சக்தி வாய்ந்த மனிதராக முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

இப்பட்டியலில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின் இரண்டாவது இடத்திலும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மூன்றாம் இடத்திலும் உள்ளனர்.

மேலும் ஜேர்மனி சான்சிலர் ஏஞ்சலா மேர்கல் நான்காவது இடத்திலும், அமேசன் நிறுவனர் ஜெப் பிசோஸ் ஐந்தாவது இடத்திலும், பாப்பரசர் பிரான்ஸிஸ் ஆறாவது இடத்திலும் பில்கேட்ஸ் ஏழாவது இடத்திலும், சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மான் எட்டாவது இடத்திலும், இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஒன்பதாவது இடத்திலும் உள்ளனர்.

அத்துடன் உலகின் முக்கிய தலைவர்களில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் 12 ஆவது இடத்திலும், பேஸ்புக் மார்க் ஜுக்கர்பெர்க் 13 ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'ஜெ' சொத்துக்களை கையகப்படுத்தும் ஆய்வுகள் தீவிரம்!

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சொத்துக்களைக் கையகப்படுத்துவதற்கான ஆய்வுப் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளியென அறிவிக்கப்பட்டு, சிறைத்தண்டனையை அனுபவித்து வந்த ஜெயலலிதாவிற்கு 100 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

ஏனினும் ஜெயலலிதா மறைவிற்குப் பின்னர் இவ் அபராதத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது தொடர்பில் நீதிமன்றம் ஆலோசித்து வந்தது.

இந்நிலையில் ஜெயலலிதாவிற்கு வழங்கப்பட்ட அபராதம் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி கர்நாகா அரசு உச்சநீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தது.

இம்மனு மீதான விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது முதல், ஜெயலலிதா சொத்துக்கள் தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் 20வருடங்களுக்கு மேலாக ஜெயலலி



தாவுடன் இணைந்து சொத்து குவிப்பு செயலில் ஈடுபட்ட சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரும் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டுச் சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

இதுவரையில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரிடம் 68 விதமான சொத்துக்கள் உள்ளதாக தெரியவந்துள்ளது.

எனவே இத் தகவலை தொடர்ந்து அந்தச் சொத்துக்கள் எங்கெங்கு உள்ளன, அவற்றை எவ்வாறு கையகப்படுத்துவது தொடர்பில் தற்போது ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொலை, கொள்ளைச் சம்பவம் தமிழகத்தில் அதிகரிக்கும்!

## ஜி.கே.வாசன் புகார்

தமிழக அரசு சமூக விரோதிகளிடமிருந்து தமிழக மக்களின் உடைமைகளுக்கும், உயிருக்கும் பாதுகாப்பைக் கொடுத்து, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக ஜி.கே.வாசன் வெளியிட்ட அறிக்கையில்-

தமிழகத்தில் மாநகரம், நகரம், கிராமம் ஆகிய வற்றிற்கு உட்பட்ட பகுதிகளில் கொலை, கொள்ளை, திருட்டு போன்றவைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை அடையாளம் கண்டு, அவர்களுக்கு கடுமையான தண்டனையைக் காலம் தாழ்த்தாமல் கொடுக்கக்கூடிய நிலை ஏற்பட்டால் தான் மக்கள் நம்பிக்கையோடு நடமாட முடியும். இல்லையென்றால் பகலானாலும், இரவானாலும் பயத்தோடு தான் வெளியில் செல்ல நேரிடும்.

எனவே இந்த பயத்தில் இருந்து மீளவும், பாதுகாப்பாக செல்வதற்கும் மக்களுக்கு நம்பிக்கை கொடுக்க வேண்டும் என்பதற்காக 24 மணிநேர நடவடிக்கையில் முனைப்போடு செயற்பட வேண்டிய கட்டாயம் தமிழக காவல்துறைக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# டெங்கால் தமிழகத்தில் 1451 பேர் பாதிப்பு!

மத்திய அரசின் புள்ளி விவரங்களின்படி, இந்தியாவிலேயே அதிகமாக தமிழகத் தில் தான் 1451 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் மழை மற்றும் குளிர் காலங்களில் பரவும் டெங்கு போன்ற தொற்று நோய்கள் ஆண்டு முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன

2017 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 22 ஆயிரத்து 197 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், 2018 ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே டெங்குக் காய்ச்சலின் பாதிப்பு தமிழகத்தில் அதிகரித்துள்ளது.

மத்திய அரசின் புள்ளி விவரங்களின்படி, நாட்டிலேயே அதிகமாகத் தமிழகத்தில் தான் 1451 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# பா.ஜ.க. தன்னை தேசத்துக்கு அர்ப்பணிக்கிறது: காங்கிரஸ் ஒரு குடும்பத்தை வழிபடுகிறது!

டில்லி, மே 10

கர்நாடகாவில் தேர்தல் காய்ச்சல் உச்ச நிலையை எட்டிக் கொண்டிருக்கிறது. அதிகாரத்துக்கான வேட்கையில் காங்கிரஸும், பா.ஜ.கவும் ஒருவர் மீது ஒருவர் கடுமையான விமர்சனங்களை ஏவி விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இருதரப்பினருமே யார் உத்தமர் என்பதில் போட்டாப் போட்டியாகப் பேசி விளம்பரம் தேடி வருகின்றனர். கர்நாடகாவில் காங்கிரஸ் தூக்கி எறியப்படும். தோல்விக்கான காரணங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர் என்று பிரதமர் மோடி நேற்றுத் தேர்தல் பிரசாரத்தில் கூறினார்.

விஜயபுராவில் மோடி தெரிவித்தவை வருமாறு:-

கர்நாடக மக்கள் காங்கிரஸைத் தூக்கி எறிய முடிவுகட்டி விட்டனர். அதன் தவறான ஆட்சிக்குத் தண்டனை கொடுக்க முடி

## பிரதமர் மோடி விமர்சனம்

வெடுத்து விட்டனர். காங்கிரஸ் தோல்விக்கான காரணத்தை இப்போதே தேட ஆரம்பித்து விட்டனர்.

நடப்பு கர்நாடக காங்கிரஸ் ஆட்சியில் ஒரு அமைச்சர் கூட நிதி முறைகேடு குற்றச்சாட்டை எதிர்கொள்ளாதவர்களே இல்லை. ஆளும் காங்கிரஸ் கட்சி சமூகத்தைப் பிளவுபடுத்தி 'சாதி எனும் வித்தை' பரப்புகின்றனர்.

பரம்பரை ஆட்சியில் நாட்டையேச் சீரழித்த காங்கிரஸ், பரம்பரை புகழ் பேசியே தங்களையே அழித்துக் கொள்கின்றனர். பா.ஜ.க .நாட்டுக்காகத் தங்களை அர்ப்பணிக்கிறது. ஆனால், காங்கிரஸ் ஆட்சியோ ஒரு குடும்பத்தை வழிபடுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐ.தே.கவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வின் மீதோ எமக்குத் தனிப்பட்ட முரண்பாடுகள் ஏதுமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்தும் பலமான சக்தியாக உருவாகுவதே எமது இலக்காகும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சபை அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய அரசில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களாகச் செயற்பட்ட 16 உறுப்பினர்களான நாங்கள் இன்று எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளோம்.

சுயாதீனமாகத் தீர்மானம் எடுப்பதற்கு ஜனாதிபதி எமக்கு அனுமதி வழங்கியுள்ளார். அதற்கமைய நாம் எதிரணியில் அமரத் தீர்மானம் எடுத்தபோது கூட்டு எதிரணித் தலைவர் மஹிந்தவும் எமக்கு ஆதரவு தெரிவித்ததுடன் கூட்டு எதிரணி நாடாளுமன்றக் குழுக்களின் தலைவரான தினேஷ் குணவர்தன மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் எம்மை வரவேற்றனர்.

மேலும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறாடாவான அனுரகுமார திசாநாயக ஆகியோருடன் இணைந்து எதிர்க்கட்சியின் பிரதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படவும் தயாராக உள்ளோம்.

மத்திய வங்கி நிதி மோசடி இடம்பெற்ற நிலையில் அரசில் இருந்துகொண்டு நாம் பாரிய அழுத்தங்களை முன்னெடுத்தோம். அதேபோல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர முதலில் மத்திய வங்கி ஊழல் குறித்து முறைப்பாட்டையும் செய்திருந்தார்.

அத்துடன் கோப் குழுவில் மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்தும் நாம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன் நாம் ஜனாதிபதிக்கும் அந்தக் காரணிகளை முன்வைத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் வலியுறுத்தினோம்.

இவ்வாறான சூழலின் பின்னணியில் பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே எம்மால் நிராகரிக்க முடியாத விடயங்களாக அமைந்தன.

ஆகவே தேசிய அரசில் நாம் அமைச்சர்களாக, பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களாகச் செயற்பட்டபோதிலும் எமது மனச்சாட்சிக்கு அமைய நம்பிக்கையில்லாப்பிரேரணையை ஆதரிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஆகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து 16 பேரும் அரசை விட்டு வெளியேறுவோம் எனத் தீர்மானம் மேற்கொண்டோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சிலர் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் நிலைப்பாட்டில் இருந்தனர். எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நாம் கலந்துரையாடி 16 பேர் ஆதரவாக வாக்களிக்கவும் ஏனையவர்கள் வாக்களிக்காது நிராகரிக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த மே தினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமுர்த்தி வங்கி நிதி மோசடிகள் என்ற பாரிய குற்றச்சாட்டை முன்வைத்தார்.

குறிப்பாக, கடந்த காலத்தில் சமுர்த்தி வங்கியின் 675 கோடி ரூபா நிதி மோசடி இடம்பெற்றதாகக் கூறியுள்ளார். கோடிக் கணக்கில் அல்ல சதக் கணக்கிலும் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளது என்று கூறினார். அது மிகப்பெரிய குற்றமாகும்.

ஆனால் இவ்வாறு முன்வைக்கும் குற்றச்சாட்டை நான் முழுமையாக எதிர்க்கின்றேன். பிரதமர் இவ்வாறு குற்றம் சுமத்திய பின்னர் சமுர்த்தி வங்கி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், கணக்காய்வாளர், உயர் மட்ட அதிகாரிகள் அனைவரதும் கையொப்பம் இடப்பட்ட கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் எந்தவித குற்றங்களும் இடம்பெறவில்லை என்ற அறிக்கையை முன்வைத்துள்ளனர்.

ஆகவே இந்தக் குற்றச்சாட்டு குறித்து உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். சமுர்த்தி வங்கிகளுக்குப் பொறுப்பான அமைச்சராகச் செயற்பட்டவர் என்ற நிலையில் நான் இந்த விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி செயற்படத் தயாராக உள்ளேன். – என்றார். (ஐ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கீர்த்தி தென்னக்கோன், அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கேள்வி யெழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபைகள் தேர்தல்களுக்கான எல்லைகளை மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவானது தனது பணிகளை நிறைவு செய்து அதன் அறிக்கையை உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கையளித்துள்ளது.

அது நடந்து நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் அறிக்கை இதுவரை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த ஆண்டின் இறுதிக்குள் ஆறு மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைகின்றது. அவற்றுக்கான தேர்தல் பிற்போடப்படுவது ஜனநாயக விரோதமாகும்.

ஆனால் எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்ற அங்கீகாரம் பெறாத நிலையில் புதிய தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாத நிலை ஏற்படலாம்.

எனவே உடனடியாக எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; – என்றார். (ஐ)

## துன்னாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கைக்குண்டு ஒன்று நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

வீட்டில் எவரும் இல்லாத நிலையில் அந்தப் பகுதியில் விறகு எடுக்கச் சென்ற ஒருவர் கைக்குண்டு இருப்பதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். இதனையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கைக்குண்டை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## நீதித்துறையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம், தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், குற்றவியல்நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் ஆகியன மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

அதிகாரத்தில் இருப்பவர்கள் முக்கியமாக அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட குற்றச்செயல்கள் உரிய நேரத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஆட்சிமாற்றமொன்று ஏற்படும்வரை அவ்வாறானவர்களுக்கு எதிரான வழக்குகள் இழுத்தடிக்கப்படும். அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த நடவடிக்கைகள் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்படும். ஊழல் மோசடிகள் உயர்ந்த மட்டத்தில் ஈடுபடுவதற்கு இதுவே பிரதான காரணமாகும்.

முக்கியமான அரசியல் புள்ளிகள் தொடர்புபட்ட குற்றச்செயல்கள் பற்றிய விசாரணைகளை நடத்தி முடிப்பதற்கு ஐந்து வருட நாடாளுமன்றக் காலம் போதுமானதாக இல்லை. ஆட்சி மாற்றங்களின் பின்னர் மோசடிக் காரர்கள் நிரந்தரமாகத் தப்பிச் செல்லும் வரலாறும் காணப்படுகிறது. ஊழல் மோசடிகள் தொடர்பான விடயத்தில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. துரதிஷ்டவசமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று மாதங்களில் ஒரு வழக்கில் மாத்திரமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அந்த வழக்கும் தற்பொழுது மேன்முறையீட்டுக்கு உட்பட்டுள்ளது. பொதுவான சட்ட அடிப்படையின் கீழ் இரண்டு மேன்முறையீடுகளுக்கு அதாவது மேலும் ஒரு தசாப்தத்துக்கு வழக்கை இழுத்துச் செல்ல முடியும்.

துரிதமான விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் வழக்குகள் காலதாமதமாக இடம்பெறுவதைக் காணமுடிகிறது. இருபது வருடங்கள் வழக்கு இழுபட்டுச் செல்லும் நிலைமையும் உள்ளது. இதற்குச் சிறந்த உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இலக்குவைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கைக் கூற முடியும். 17 வருடங்களின் பின்னரே இந்த வழக்கில் தண்டனை வழங்கப்பட்டது. இந்த வழக்கில் இந்து மதகுரு ஒருவரும், அவருடைய பாரியாரும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தனர். இதில் மதகுருவுக்கு 17 வருடங்களின் பின்னர் தண்டனை வழங்கப்பட, அவருடைய மனைவி 17 வருடங்களின் பின்னர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். அதுவரை அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட அவர் மனோநிலை பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். இது சட்டத்துறையில் காணப்படும் காலதாமதத்துக்குச் சிறந்த உதாரணமாகும். – என்றார். (ஐ)

## நாடாளுமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கள் தீயை அணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர்.

காற்றுச் சீராக்கியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மஹிந்த தலைமை தாங்கும் கூட்டு எதிரணி தலைமையிலான அணிக்கு நாட்டு மக்களின் 60 வீதமான வாக்கு வங்கி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் நடைபெற்ற மே தினக் கூட்டங்களில் வெற்றிகரமான மிகப் பெரிய மே தினக் கூட்டத்தை நடத்திய பெருமை கூட்டு எதிரணிக்குக் கிடைத்துள்ளது.

கடந்தமூன்று ஆண்டுகளில் கிருலப்பனை, காலிமுகத்திடல் மற்றும் காலியில் நடைபெற்ற மே தினக் கூட்டங்கள் சாட்சியாக இருக்கின்றன.

கடந்த வருடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் காலியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் வந்த மக்களை விட அதிகளவானோர் இம்முறை கூட்டு எதிரணியின் கூட்டத்திற்கு வந்தனர்.

கூட்டு எதிர்க்கட்சி நாட்டின் அரசை ஆட்டிப் படைக்கும் சக்தியாக மாறியுள்ளது. அரசை விட எமக்கு டிக்களின் ஆதரவு இருக்கின்றது என்பதை நாங்கள் கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மூலம் உலகத்துக்குக் காட்டியுள்ளோம்.

அத்துடன் அரசுக்கு எதிராக நாடு முழுவதும் நடத்திய கூட்டங்களில் நாங்கள் எமது பலத்தைக் காட்டினோம். இதனடிப்படையில், தற்போது நாட்டை ஆட்சி செய்யும் அரசு மக்களின் ஆதரவில்லாத அரசு.

கூட்டு எதிர்க்கட்சியின் மக்கள் பலம் ஜனாதிபதியை மட்டக்களப்பு நோக்கித் தள்ளியதுடன் பிரதமர் தலைமையிலான கட்சியை உள்ளக விளையாட்டு அரங்கத்தை நோக்கித் தள்ளியுள்ளது.

அரசில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான கட்சிகள் தமது மே தினக் கூட்டங்களைக் கூட நடத்திக்கொள்ள முடியாதளவில் பலவீனமடைந்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வரலாற்றில் எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து நான் என் தந்தையுடன் மே தினக் கூட்டங்களில் கலந்துக்கொண்டேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் பொதுச் செயலாளர்கள் செய்த புண்ணியம் காரணமாக வரலாற்றில் முதல் முறையாக இம்முறை சுதந்திரக்கட்சியின் மே தினக் கூட்டத்தில் தொழிற்சங்கள் கலந்துக்கொள்ளவில்லை – என்றார். (ஐ)

## மைத்திரியிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர், அமைச்சர் பொன்சேகா சில அமைச்சர்களுடன் சென்று ஜனாதிபதியைச் சந்தித்து மன்னிப்புக் கோரினார் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

சரத் பொன்சேகா கடந்த 3 ஆம் திகதி புதிய அமைச்சுக் கடமைகளைப் பொறுபேற்றுக் கொண்ட பின்னர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதியைக் கடுமையாக விமர்சித்தார்.

அத்துடன் அண்மையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி யின் மேதினக் கூட்டத்திலும் ஜனாதிபதியின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்திருந்தார். இது தொடர்பாக ஜனாதிபதியை நேற்று மதியம் சந்தித்து மன்னிப்புக் கோரினார் எனத் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த ரயிலில் பிரிட்டன் வாழ் தமிழ்க் குடும்பப் பெண்ணொருவர் வ்வுனியா ரயில் நிலையத்தில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்தார். இதன்போது அந்த ரயிலில் பெருமளவில் சன நடமாட்டம் இல்லாமையால் இதனைப் பயன்படுத்திக் கொண்ட ரயில்வே சிட்டை பரீட்சிக்கும் ஊழியர் ஒருவர், அந்தப் பெண்ணுடன் தகாத முறையில் நடக்க முயற்சித்தார்.

இதனை அவதானித்த அங்கு நின்றவர்கள் அந்த ஊழியரிடம் சென்று ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள்? எனக் கேட்டபோது, அவ்வாறு கேட்டவர்களைத் தாக்க முயற்சித்தார். மேலும் தமிழர்கள் கீழ்த்தரமானவர்கள் என்று தகாத வார்த்தைகளை அடிக்கடி பேசிக் கொண்டிருந்தார். இதன்போது அங்கு சென்ற ஊடகவியலாளர் ஒருவரையும் அவர் தாக்க முயற்சித்தார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி ரயில் நிலையத்தை அண்மித்தபோது நடந்து கொண்டிருந்தது.

'நீங்கள் தமிழ் என்றால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. பொலிஸாரால்லும் யாராலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. இங்கு நான்தான் பெரியவன்' என்று மிரட்டும் தொனியில் அந்த ஊழியர் அனைவரையும் மிரட்டியுள்ளார். இந்நிலையில் ரயில் யாழ்.பிரதான ரயில் நிலையத்தை வந்ததடைந்ததும், அந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். ரயில் நிலைய அதிபருக்கு அந்தப் பெண்ணால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதோடு, சம்பவத்துக்கான ஆதாரமாக காணொலியும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் ரயில்வே ஊழியரைக் கைது செய்த யாழ். பொலிஸ் நிலையச் சிறுவர் பெண்கள் பாதுகாப்புப் பிரிவு பொலிஸார் சம்பவம் தொடர்பில் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுப் பிற்பகல் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்கப் பொலிஸார் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. அதனால் அவரை நிபந்தனையுடனான பிணையில் விடுவிக்க நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த அச்சுறுத்தல் மற்றும் தகாத முறையில் நடந்து கொண்டமை குறித்து மனித உரிமை ஆணைக் குழுவிலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ - 7)

## இரணைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதன்போது அந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்த மக்களுக்கு ஒரு தொகுதி உணவுப் பொருட்களையும் அவர்கள் வழங்கினர்.

கட்சியின் 'தூயகரங்கள் தூய நகரம்' செயற்றிட்டத்தின் கீழ் அந்தப் பிரதேசத்தில் சிரமதானப் பணியும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த விஜயத்தின்போது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள். ஆதரவாளர்கள் பலரும் சென்றிருந்தனர். (ஐ-7)



# குசல் பெரேராவின் அதிரடியால் கண்டியை வீழ்த்தியது தம்புள்ளை

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மாகாண மட்ட 'சுப்பர் 4' ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இரண்டு போட்டிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

இதில் கண்டி அணியை வீழ்த்தி தொடரில் முதல் வெற்றியைப் பெற்ற தம்புள்ளை போனஸ் புள்ளியுடன் புள்ளிப் பட்டியலில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியதோடு காலி அணியிடம் தொடரில் முதல் தோல்வியைச் சந்தித்த கொழும்பு அணி இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.

**கண்டி எதிர் தம்புள்ளை**

பந்துவீச்சில் அதிரடி காட்டிய தம்புள்ளை அணி கண்டி அணியைக் குறைந்த ஓட்டங்களுக்கு வீழ்த்தி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றி ஒன்றைப் பெற்றது.

குசல் பெரேரா தலைமையிலான தம்புள்ளை அணி தனது முதல் இரு போட்டிகளிலும் தோல்வி அடைந்த நிலையில இம்முறை மாகாண மட்டத் தொடரில் பெறும் முதல் வெற்றி இதுவாகும்.

கொழும்பு பி சரா ஓவல் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட கண்டி அணி ஆரம்பம் முதலே ஆட்டம் காண ஆரம்பித்தது.தம்புள்ளை அணியின் முதல் நான்கு துடுப்பாட்ட வீரர்களும் ஒற்றை இலக்கத்துடன் வெளியேறியதோடு அடுத்து வந்த வீரர்களும் சோபிக்கத் தவறினர்.

குறிப்பாகக் காயத்தில் இருந்து மீண்டு போட்டிகளுக்குத் திரும்பி இருக்கும் இலங்கை ஒருநாள் அணித்தலைவரும் கண்டி அணித் தலைவருமான அஞ்சலோ மத்தியூஸ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மத்திவ்ஸ் தொடரின் முதலிரு போட்டிகளிலும் முறையே ஆட்டமிழக்காது 20 மற்றும் 23 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும் மத்திய வரிசையில் வந்த சாமர கப்புகெதர பெற்ற 40 ஓட்டங்கள் கண்டி அணி 100 ஓட்டங்களைத் தாண்ட உதவியது. பின் வரிசை வீரர் சச்சித் பத்திரண இரண்டாவது அதிகூடிய ஓட்டங்களாக 38 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் மூலம் கண்டி அணி 29.1 ஓவர்களில் 127 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்போது தம்புள்ளை அணி சார்பில் சுழல் பந்துவீச்சாளர் ஜெப்ரி வென்டர்சே 4.1 ஓவர்களில் வெறுமனே 7 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளைப் பதம்பார்த்தார். இந்நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தம்புள்ளை அணிக்கு அணித்தலைவர் குசல் பெரேரா ஆரம்பத்தில் அதிரடியாக ஓட்டங்கள் பெற்று அசத்தினார்.

24 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 4 பௌண்டரிகள் 3 சிக்ஸர்களுடன் 41 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் அந்த அணியின் வெற்றி இன்னும் இலகுவானது.

குசல் பெரேரா ஆரம்ப விக்கெட்டுக்கு ருவிந்து குணசேகரவுடன் இணைந்து 50 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டதோடு குணசேகர 44 பந்துகளில் 38 ஓட்டங்களை பெற்றார்.

கனடா தேசிய அணிக்காக இதுவரை 19 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருக்கும் இலங்கையைச் சேர்ந்த குணசேகர இலங்கை உள்ளூர்ப் போட்டிகளில் அண்மைக் காலமாகச் சோபித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய வரிசையில் மூன்று வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குத் தமது விக்கெட்டை பறிகொடுத்தபோதும் தம்புள்ளை அணி 18.5 ஓவர்களிலேயே 5 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இந்த வெற்றியின் மூலம் தம்புள்ளை அணி ஒரு போனஸ் புள்ளியை மேலதிகமாகப் பெற்று மொத்தம் 5 புள்ளிகளோடு மூன்றாவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது. கண்டி அணி கடைசி இடத்திற்குத் தள்ளப்பட்டது.

# கோஹ்லிக்கு ஓய்வு தலைவராக ரஹானே



ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான இந்திய டெஸ்ட் அணிக்கு, அஜிங்கியா ரஹானே அணித் தலைவராகக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் விளையாட வேண்டும் என்பதற்காக அணித்தலைவர் விராட் கோஹ்லிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதனால், அஜிங்கியா ரஹானே ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு அணித்தலைவராகச் செயல்பட உள்ளார்.

அதே போல, அயர்லாந்து அணிக்கு எதிரான இரண்டு டி20 போட்டிகள் தொடரிலும் கோஹ்லி விளையாடமாட்டார் என்பதால், அந்த போட்டிகளுக்கு ரோஹித் ர்மா தலைவராக இருந்து அணியை வழி நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஸி. ஒரு நாள் போட்டி தலைவராகவும் பெய்ன்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித் தலைவராகவுள்ள விக்கெட் காப்பாளர் டிம் பெய்ன், இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அந்தத் தொடருக்கான அணி உபதலைவராகவும் இங்கிலாந்துக்கெதிரான ஒற்றை 20/20 சர்வதேசப் போட்டி, சிம்பாப்வேயில் இடம்பெறவுள்ள சிம்பாப்வே, பாகிஸ்தான், ஆஸ்திரே லியா பங்கேற்கும் முத்தரப்பு 20/20 சர்வதேசப் போட்டித் தொடர் ஆகியவற்றுக்கான ஆஸ்திரேலிய அணியின் தலைவராகவும் ஆரோன் பிஞ்ச் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர. இங்கிலாந்துக்கெதிரான ஒற்றை 20/20 போட்டி, சிம்பாப்வேயில் இடம்பெறவுள்ள முத்தரப்பு 20/20 சர்வதேசப் போட்டித் தொடர்ஆகியவற்றுக்கு ஆஸ்திரேலிய அணி யினது உப தலைவராக அலெக்ஸ்காரேநியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமுக்கு சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர் ஷோன் மார்ஷ், சுழற்பந்துவீச்சாளர் நேதன் லையன் ஆகியோர் மீள அழைக்கப்பட்டுள்ளதுடன், இளம் துடுப்பாட்ட வீரரான டார்சி ஷோர்ட் முதன்முறையாக குழாமில் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், 20/20 சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமில், துடுப்பாட்ட வீரர் நிக் மடின்ஸன், சகலதுறை வீரர் ஜக் வில்டர்முத், சுழற்பந்துவீச்சாளர் மிற்சல் சுவப்சன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, துடுப்பாட்ட வீரர் கிறிஸ் லின்னும் சுழற்பந்துவீச்சாளர் அடம் ஸாம்பாவும் இரண்டு குழாம்களிலும் இடம்பெறவில்லை என்பதோடு, வேகப்பந்துவீச்சாளர் பற் கமின்ஸும் மிற்சல் ஸ்டோர்க்கும் காயங்களிலிருந்து குணமடைந்து வருவதன் காரணமாகக் குழாம்கள் தேர்வு செய்யப்படும்போது கருத்திற் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், மேற்படி தெரிவுகள் குறுகிய காலத்துக்கானவை என்றவாறான கருத்துகளைத் தேர்வுக்குழுத்தலைவர் ட்ரெவர் ஹோன்ஸ் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு நாள் சர்வதேசப் போட்டிக் குழாம்: டிம் பெய்ன் (அணித்தலைவர், விக்கெட் காப்பாளர்), ஆரோன் பிஞ்ச் (உபதலைவர்), அஸ்தன் அகர், அலெக்ஸ் காரே (விக்கெட் காப்பாளர்), ஜொஷ் ஹேசில்வூட், ட்ரெவிஸ் ஹெட், நேதன் லையன், கிளென் மக்ஸ்வெல், ஷோன் மார்ஷ், ஜை றிச்சர்ட் ஸன், கேன் வில்லியம்சன், டார்சி ஷோர்ட், பில்லி ஸ்டான்லேக், மார்க்கஸ்ஸ்டொய்னிஸ், அன்றூடை

20/20 குழாம்: ஆரோன் பிஞ்ச் (அணித்தலைவர்), அலெக்ஸ் காரே (உபதலைவர், விக்கெட் காப்பாளர்), அஸ்தன் அகர், ட்ரெவிஸ் ஹெட், நிக் மடின்ஸன், கிளென் மக்ஸ்வெல், ஜை றிச்சர்ட்ஸன், கேன் றிச்சர்ட்ஸன், டார்சி ஷோர்ட், பில்லி ஸ்டான்லேக், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், மிற்சல் சுவப்ஸன், அன்றூடை, ஜக் வில்டர்முத்.

# பகலிரவு டெஸ்டில் ஆடாது இந்தியா

ஆஸ்திரேலியச் சுற்றுப் பயணத்தின்போது இந்திய அணி பகலிரவு டெஸ்ட் போட்டியில் பங்கேற்காது என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பய ணம் மேற்கொள்ளவுள்ள இந்தியா டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதன்போது டிசெம்பர் மாதத்தில் அடிலெய்ட் நகரில் பகலிரவு டெஸ்ட் போட்டியை நடத்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தீர்மானித்திருந்தது. இந்தநிலையில் இந்தப் பகலிரவுப் போட்டியில் இந்தியா பங்கேற்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்யும் வகையில் இந்திய கிரிக்கெட் சபையானது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்குக் கடிதம் ஒன்றினையும் அனுப்பிவைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் சௌத்ரி கருத்துத் தெரிவிக்கும் போது, இந்திய அணியானது பகலிரவு போட்டிக்குத் தயாராக இன்னும் ஒரு வருட கால அவகாசம் தேவை எனக் குறிப்பிட்டார். இதன் காரணமாகப் பகலிரவுப் போட்டியில் இந்தியா பங்கேற்காது எனவும் ஏனைய போட்டிகள் தீர்மானிக்கப்பட்டவாறு நடக்கும் எனவும் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

இன்று

Delhi Daredevils v Sunrisers Hyderabad

10.05.2018

இரவு 8.00 மணி

காலைக்கதிர்
Kalaikkathir



# முள்ளிவாய்க்காலில் முதன்மைச் சுடரை போரில் பாதிப்புற்ற ஒருவரே ஏற்றுவார்

## முதல்வர் உறுதியளித்தார் என்கிறது ஜனநாயகப் போராளிகள் கட்சி




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின் முதன்மைச் சுடரை போரில் உறவுகளை இழந்தவர்கள் சார்பில் ஒருவரே ஏற்றிவைப்பார். அதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் இணக்கம் தெரிவித்துள்ளார். அத்துடன், பொது மக்களின் சார்பில் பொதுப் பிரகடனம் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்படும்


இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் துளசி தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையால் கடந்த ஆண்டுகளில் நடத்தப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளில் முதன்மைச் சுடரை வடக்கு மாகாண முதலமைச்சரே ஏற்றி வைத்தார். ஏனைய சுடர்களையே போரில் உறவுகளை இழந்த மக்கள் ஏற்றிவைத்தனர்.

இந்த நிலையில் இம்முறை அந்த நடைமுறை பின்பற்றப்படாது என்று முடிவு எட்டப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின் முதன்மைச் சுடரைப் போரில் உறவுகளை இழந்தவர்கள் சார்பில் தாயார் ஒருவரே ஏற்றிவைப்பார் என யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் திட்டமிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்தே இந்த முடிவை ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் துளசி தெரிவித்தார். (ஐ)

## வடக்கு - கிழக்கிலும் இறப்பர் உற்பத்தி



கொழும்பு, மே 10

மலையகப் பகுதியைப் போன்று வடக்கு – கிழக்கிலும் இறப்பர் செய்கையை ஊக்குவிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகப் பெருந்தோட்ட அமைச்சின் ஆலோசகர் லக்ன பரனவிதான தெரிவித்தார்.

சிறு தோட்ட இறப்பர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி பொருள்களுக்குக் கூடுதலான விலையைப் பெற்றுக் கொள்வதற்குத் தற்போது நவீன தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு உதவுவதற்கு நிறுவனங்கள் முன்வந்துள்ளன என்று பெருந்தோட்ட அமைச்சின் ஆலோசகர் கூறினார்.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் இறப்பர் உற்பத்தி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வவுனியாவின் தெற்குப் பிரதேசத்தில் 25 ஏக்கரில் தற்போது இறப்பர் செய்கை சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆசியப் பிராந்தியத்தில் இலங்கை முக்கிய கேந்திர நிலையமாக வளர்ச்சி பெறும் என்று தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளன. எதிர்காலத்தில் இலங்கை இறப்பர் உற்பத்தியில் கேந்திர நிலையமாகத் திகழும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசால் சிறு தோட்ட இறப்பர் உற்பத்திக்காக வழங்கப்படும் நிவாரண உதவி வடக்கு - கிழக்கு இறப்பர் பயிர் உற்பத்திக்காக வழங்கப்படும் என்று அவர் கூறினார். (ஐ)

## வைத்தியர் மீது தாக்குதல்

காலி – கராப்பிட்டிய வைத்தியசாலையில் பணிப்புரியும் வைத்தியர் ஒருவரைத் தாக்கியமை தொடர்பில், நபர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தனது தாய்க்கு முறையாகச் சிகிச்சையளிக்கப்படவில்லை, எனத் தெரிவித்தே, சந்தேக நபர் மருத்துவரைத் தாக்கியுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான மருத்துவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், தாக்குதல் மேற்கொண்ட நபரை இன்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## வவுனியா வைத்தியசாலையில் குருதிக்குப் பெரும் தட்டுப்பாடு



வவுனியா, மே 10

வவுனியா பொது வைத்தியசாலையிலுள்ள இரத்தவங்கியில் அனைத்து வகையான குருதிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அனைத்து வகைக் குருதிகளும் அவசரமாகத் தேவைப்படுவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கு. அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள், யுவதிகள், விளையாட்டுக் கழகங்கள், பொலிஸார், இராணுவத்தினர், பொது அமைப்பினர், உத்தியோகத்தினர், எமது இரத்த வங்கியின் குருதிக் கொடையாளர்கள் அனைவரும் முன்வந்து இரத்த தானம் மேற்கொள்ள வேண்டும்.

இதன்மூலம் பல்வேறு நோய்களுடனும், விபத்துக்களுக்குள்ளானவர்களுக்கு உதவி செய்து அவர்களின் உயிர்களைக் காப்பாற்ற முடியும் என வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்



சைட்டம் மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் அரசின் செயற்பாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் என்பன பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டன.

உயர்கல்வி அமைச்சுக்கு முன்னால் வைத்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்ணீர்ப் புகைக்குண்டு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டு பொலிஸார் கலைத்துள்ளனர்.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்பு வெளியிட்டு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நேற்றுப் புதன்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்டிருந்தது. (ஐ)

## தொடர்ச்சியாக இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவி

கொழும்பு, மே 10

இலங்கைக்குத் தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மறுசீரமைப்புக்களுக்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் துங் - லேய் மார்கு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலையான சமாதானத்தையும் சுபீட்சத்தையும் உருவாக்குவதற்குச் சகல வழிகளிலும் உதவிகள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மீன்பிடி ஏற்றுமதித் தடை நீக்கம் மற்றும் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை போன்றவற்றினால் இலங்கைக்கு பாரிய நலன்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

## கோவிலுக்குள் வாள்வெட்டு: கைதாகிய மூவர் மறியலில்



யாழ்ப்பாணம், மே 10

நீர்வேலியில் கோவிலில் வைத்து இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

நீர்வேலிச் செம்பாட்டுப் பிள்ளையார் கோவிலில் வைத்து கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை இளைஞர்கள் இருவர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அப்புத்துரை கிரிசன் (வயது -23) என்ற இளைஞன் கழுத்தில் வெட்டுப்பட்டும் கிரிகேசன் (வயது – 23) காலில் படுகாயமடைந்த நிலையிலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறனர்.

அவர்களின் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளைக் கோவில் கிணற்றுக்குள் வாள்வெட்டுக் கும்பல் தூக்கி வீசியுள்ளது. ஒருவரின் கைபேசியைக் கோவிலுக்கு முன்பாக உள்ள தேங்காய் உடைக்கும் கல்லில் போட்டுக் கும்பல் உடைத்துமிருந்தது.

பொலிஸாரால் தேடப்பட்டுவரும் ஆவா குழுவின் முக்கியஸ்தர் வினோத் உள்ளிட்ட 8 பேர் கொண்ட கும்பலே இந்த வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டது எனப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் இணுவிலைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் கோப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரையும் வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன், அன்றைய தினம் அவர்களை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறும் பணித்தார். (ஐ-7)

## பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியின் பதவிக் காலம் நீடிப்பு

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வித்தியாலங்காரவுக்கு சேவை நீடிப்பை வழங்க அமைச்சரவை நேற்று முடிவு செய்துள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருந்தார். அமைச்சரவை அதற்கு அனுமதியை வழங்கியுள்ளது.

இதற்கு அமைய ரவி வித்தியாலங்காரவின் பதவிக்காலம் ஒப்பந்த அடிப்படையில் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. மே மாதம் 14 ஆம் திகதியுடன் வித்தியாலங்கார ஓய்வு பெறவிருந்தார்.

ரவி வித்தியாலங்காரவுக்கு எதிராகப் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவு மற்றும் இலஞ்ச ஆணைக்குழு ஆகியன விசாரணைகளை நடத்தி வருவதால், அவரது சேவைக் காலத்தை முடிவுக்குக் கொண்டு வருமாறு பொலிஸ் மா அதிபர், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் பரிந்துரை செய்திருந்தார். இது சம்பந்தமாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு இன்று இறுதி முடிவை எடுக்கவிருந்தது.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் 1979 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பொலிஸ் சேவையில் இணைந்துக் கொண்டார். 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவருக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.